www.tamilarangam.net

Vaya

# தூண்டில்

51

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE, FRANCE




Tamilische Zeitschrift

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொள்ளிமலைக் காடு



வேர் என்று பெயர் சொல்லும்
விறகுகளும்
முளைப்பதாய், கிளைப்பதாய்
கனவு வர

விழுதென்று பெயர் சொல்லும்
பழுதுகளும்
வானத்தைச் சுமப்பதாய்
வார்த்தை தர

ஏமாந்ததென்னவோ
எல்லோரும்தான்.

( அங்கிருந்து என்ன அனற் பார்வை?
ஓ
அடிமரத்துப்
புது அரும்பா?
விலகி நில்லேன் விமர்சனம்
உனக்கல்ல. )

முளைப்பதற்கும்
கிளைப்பதற்கும் விருப்பென்றால்
அனுபவம் உறிஞ்சி
ஆழமாய் ஆழமாய்
அதனிலும் ஆழமாய்
நிலத்தை(யே)
நம்புவோம்.

*
சிவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஆச்சியும், குளப்படிப் பெடியனும்.



என்பதுக்கு முந்திய காலங்கள்.

அண்ணனும், தம்பியும் மண் விளையாடினார்கள். கீச்சு மாச்சுத் தம்பலம். அளாப்பினார்கள். சண்டை வந்தது. அப்பா அடித்தார்.

****************************

மாரி காலத்து வெள்ளத்தில் தெம்பல் அடித்தார்கள். காலில் நீர்ச் சிரங்குடன் காணி வெள்ளத்தில் சின்னச் சின்னக் கல்லெறிந்து விளையாடினார்கள். தெத்தித் தெத்தி அழகழகாய் கல்லெறிந்தார்கள். அண்ணன் எறிந்த கல் தம்பியின் மண்டையை உடைத்தது. சண்டை நடந்தது. அப்பா அடித்தார்.

****************************

ரேடியோப் பற்றி எடுத்து, காபனை அகற்றி. பற்றியின் வெள்ளித் தட்டினைப் பத்திரப்படுத்தினார்கள். இசைத்தட்டு றெடியாகிவிட்டது. அம்மாவின் சட்டை ஊசி களவெடுத்து, நெருப்புப் பெட்டியில் ஊசி செருகி பாட்டுப் பெட்டி செய்தார்கள். ஆச்சியின் எட்டு முழச் சேலையில் ஓரம் கிழித்து, மண்ணெண்ணெய் புனல் எடுத்து, முற்றத்து மாமரத்தில் லவுஸ்பீக்கர் செய்தார்கள்.

ஊசி முனையில் இசைத்தட்டைச் சுற்றிவிட்டு ஆனந்தக் கூத்தாடினார்கள். கத்திக் கத்திப் பாடினார்கள்.

அப்பா வந்தார். ஆச்சியின் சீலை கிழித்தது அண்ணன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லை தம்பி. இல்லையில்லை அண்ணன்தான். அப்பா அடித்தார்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

அண்ணன் தம்பியை அடித்தான்.

தம்பி அண்ணனை அடித்தான்.

அப்பாவும் அடித்தார். அடிக் கடி சண்டை நடந்தது.

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

அண்ணனும், தம்பியும் வயது க்கு வந்துவிட்டார்கள். எண்பதுக ளைத் தாண்டி தூரம் வந்துவிட் டார்கள்.

அண்ணன் கிணத்தடி வேலி தாண்டிக் காதலித்தான். தம்பி சங்கக்கடை தாண்டிக் காதலித் தான். சந்தி சிரிச்சது. அப்பாவின் வேட்டி உரிஞ்சது. தலை குனிஞ்சு போனார். அப்பா தமிழ் வாத்தி யார். ஊர் சிரித்தது.

மண்ணெண்ணெய் புனல் கட்டி பாட்டுப் பாடிய முற்றத்து மாமரத் தில் கட்டிவைத்து கண்ணுக்கு பச் சைமிளகாய் தடவி, அடிஅடி யென்று அப்பா அடித்தார். பூவர சம் தடி பஞ்சு மாதிரி வந்தது. அப்பா தமிழ் வாத்தியார். ஊர் மெச்சியது.

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

துப்பாக்கி வந்தது.

துப்பாக்கி வெடித்தது.

மின் கம்பத்தில், தெருவில் பிணங்கள்.

கோழிக் கள்ளரும், பிச்சைக் காரரும் துரோகிகளானார்கள்.

பிறகு காணவில்லை.

அண்ணன் ஒருநாள் மாயமாய் மறைந்து போனான்.

அப்பாவுக்கு பயம் வந்தது.

அம்மா ஓலமிட்டு அழுதாள்.

தம்பி இன்னொருநாள் மாய மானான்.

ஆச்சி ஒப்பாரி வைத்தாள்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

பக்கத்து வீட்டு பாலனின் சாரக்கட்டு மாறியது. மடி வீங்கி யிருந்தது. பார்வை வெருட்டியது. சனத்துக்கு உதறல் எடுத்தது. பயம் மரியாதை. தானாகவே வந் தது. அம்மாவுக்கு பாலனைத் தெரியும். சாரத்தினை அவக்கென இழுத்தான். ஊமல்க் கொட்டை ஒன்று விழுந்து.

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

துப்பாக்கிகளின் சத்தம் பெரு கியது. அண்ணனும், தம்பியும் இருட்டில் வந்தார்கள். உப்பிப் போய் இருந்தார்கள்.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும்

www.tamilarangam.net

ஆச்சிக்கும் அடையாளம் தெரியேல்லை. தங்கைதான் அடையாளம் சொன்னாள்.

அண்ணனின் முதுகில் பெரிய துப்பாக்கி ஒன்று. தம்பியின் இடுப்பில் சின்னத் துப்பாக்கி ஒன்று. அப்பாவுக்குப் பயம் தெளிந்தது. பதட்டம் வந்தது. பிள்ளைகளைப் பார்த்து பெருமைப்பட்டார். அம்மா ஒப்பாரி வைத்தாள். ஆச்சிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

*************************

யுத்தம் வந்தது. யுத்தம் நடந்தது. தமிழ் வாத்தியாரின் மதிப்பு அந்தஸ்த்து உயர்ந்தது. அண்ணனும், தம்பியும் சிங்களத்தில் நிறையச் சுட்டார்கள். யுத்தம் நடந்துகொண்டேயிருந்தது. இடையில் தமிழில் சுட்டார்கள். திடீரென்று நிறையச் சுட்டார்கள்.

அண்ணன் காதலியின் அப்பாவைச் சுட்டான்.

பாலன் அப்பாவைச் சுட்டான்.

தம்பி பாலனைச் சுட்டான்.

அண்ணன் தம்பியைச் சுட்டான்.

யாரோ அண்ணனையும் சுட்டார்கள்.

அம்மா செத்துப் போனாள்.

ஆச்சி பாவம். முருகா! முருகா!! முருகனைக் கூப்பிட்டாள்.

*************************

தங்கையின் குழந்தையும் இன்னொரு குழந்தையும் தடி



www.tamilarangam.net

வைத்து விளையாடினார்கள். தடியை துப்பாக்கிபோல் ஒப்பனை செய்து சுட்டார்கள். பொய்க்கு சுட்டார்கள். பொய்க்குச் செத்தார்கள்.

ஆச்சிக்கு வடைக்கதை நரிக்கதை தெரியும். வடைக்கதை, நரிக்கதை கேட்க யாரும் வரவில்லை. ஆச்சிக்கு துப்பாக்கி வந்த கதை தெரியாது. ஒப்பாரி சொல்லி அழுவதை நிறுத்திவிட்டாள்.

ஓரம் கிழிந்த சேலையைப் பார்த்து வெதும்பி வெதும்பி அழுது கொண்டிருந்தாள்.

யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

– மகிந்தன்

Part of the Letters Patent of Charles II dated 27 March 1668 granting the Island of Bombay to the East India Company in return for an annual rent of £10



# 10 பவுண்ஸ்'க்கு பம்பாய் !!!

*இந்தியாவின் பம்பாய் பிராந்தியத்தை வருடம் 10 பவுண்ஸ் வாடகைக்கு கிழக்கிந்திய கொம்பனிக்கு கையளிக்கும் இங்கிலாந்தின் 2ஆம் சார்ல்ஸ் மன்னனின் 1668 மார்ச் 27ஆம் திகதியிடப்பட்ட பட்டயத்தின் ஒரு பகுதி மேலே.*

"ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய்.
காசுக்கு ரெண்டா விக்கச் சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்"

*– ஒரு மலையக நாட்டுப் பாடல்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூரத்திலிருந்தோர் கடிதம்



அன்புடன் அண்ணா
எனக்கு கல்யாணம் பேசியிருப்பதாய்
கடிதம் எழுதியிருந்தாய்.

மாப்பிள்ளை
விலையையும்
மறக்காமல் எழுதியிருந்தாய்.

அண்ணா
உன் கடமைகளுக்காக
எனதுணர்வுகளை
கூறு போடாதே.

இங்கு நாம்
தாய் வயிற்றுச் சிசு போல்
குறுகிப் போய்
இமைப்பதையே மறந்து
எரிவுகளுடன்
அங்கவீனர்களாய் ...

அண்ணா
இலட்சங்களுக்கும்
கழுத்தோர வேலிக்கும்
என்
கன்னி கழியத் தயாரில்லை
என்று சொல்.

எனதிமைகளில்
நரை விழுந்தாலும்
விழிகளில் விம்பங்கள்
உண்மையாய்...

அண்ணா
எனக்காக காத்திராதே
நீ தயாராகு
உன்னை விற்பதற்கு !


*

ஆனந்த சுரேஷ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பத்திரிகைச் சுதந்திரம் கொஞ்சம் கொஞ்சமாக அடாவடிகளின் கைக்குள் உறங்கிவிட மௌனம் பேசும் உதடுகளாகிவிட்ட அவைகள் மூச்சுவிட்டு இயல்பாக சுற்றி வந்து இன்று எத்தனை நாட்கள். இங்கிருந்து செய்வதிலும் பார்க்க அங்கிருந்து செய்யும் இந்த முயற்சி பெரிதும் பயனுள்ளதாகவே நான் நினைக்கின்றேன்.

முடங்கிப்போன எமது மண்ணைவிட்டுப் புலம்பெயர்ந்தவர்கள் தொகைதான் இப்போது அதிகம், அதிகம். வெளிநாடுகளிலிருக்கும் எமது மக்களுக்கு இங்கிருக்கும் எம்மைப் பற்றித் தெரிவிக்க ஒரு சாதனமே கிடையாது. அப்படித் தெரிவித்தாலும் விமர்சனமான, தெளிவான தகவல்களல்லாமல் இருண்டு, வெளிச்சத்திற்கு வரும்போது உத்தியோகபூர்வச் செய்தியாகவே அவை கக்கப்படுவதனால் அவைகளில் எத்தனைவீதம் உண்மையைக் காணமுடியும்?

இங்கிருக்கும் எமக்குக்கூட வெளிப் பார்வையில் பட்ட எத்தனையோ விடயங்களைத் "தூண்டில்" போட்டுக் காட்டும்போதுதான் உண்மை எது? பொய் எது? என்பது புலனாகிறது. அந்தளவிற்கு நாம் இருட்டடிப்புச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்படுகிறோம்.

வானொலிச் செய்திகள், பத்திரிகை நியூஸ்கள் என்று எதை எடுத்தாலும் எப்படி நம்புவது? என்றொரு பென்னம்பெரிய வினா இப்போது எழுகின்றது.

இந்த வரிசையில் "கொஸிப் பொக்ஸும், அரசின் குரலும்" என்ற தலையங்கத்தின் கீழ் கலம் 49இல் புட்டுக் காட்டிய உதாரணங்களைப் போல இன்னும் எத்தனையை நாம் நம்பிக்கொண்டிருக்கிறோமோ?

"தூண்டில்" கொண்டுவரும் அனைத்து அம்சங்களிலும் உண்மைகள் பொதிந்திருக்கின்றன. இந்த உயிருள்ள உண்மைகள்தான் இன்று உலகிற்குத் தேவை.

எனவே சிரமமாயிருக்கிறது என்று பத்திரிகையை மூடிவிட்டால் ஒன்றும் நடக்காது. உண்மைகள் மூடப்பட்டுவிடும். வெளிச்சமில்லாமல் மனிதம் தொடர்ந்தும் தொடர்ந்தும் இருட்டுக்குள் புதைந்து ஆழம் காணாமல் போய்விடும்.

- அ. (இலங்கை)

✉ ✉ ✉ ✉ ✉

"தூண்டில்" பற்றி "நான்காவது பரிமாணம்" இதழ் 3இல் செ. யோகராசா என்பவர் ஒரு சில விடயங்கள் எழுதியிருக்கிறார். எல்லாம் உங்கள் புகழ் பாடல்தான். இவர் சரியாகத் தூண்டில் வாசிப்பதில்லைப் போலும்.

கடைசியாக வந்த தூண்டிலில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று விளங்கவில்லை. முதலாளித்துவ தேசியவாதம், தரகு முதலாளித்துவம் என விளங்காத புதிர்கள். இப்படித்தான் கூட்டணியினரும் பல கூட்டங்களில் விளங்காத வார்த்தைப் பிரயோகங்கள் செய்ததை நினைவில் வைத்திருங்கள். மக்களுக்கு விளங்க இன்னும் இறங்கி வாருங்கள். இதனால் நீங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இழக்கப் போவது எதுவுமில்லை.

- கோபால்

துாண்டிலை இரண்டு மாதங்களாக்கியது தொடர்பாக எனக்கும், நண்பர்களிற்கும் மனவருத்தம்தான். இவ் வருத்தத்தை இரவல் துாண்டில் நிறைவு செய்யும் என எதிர்பார்க்கின்றோம். துாண்டிலில் வரும் எளிமையான தமிழில் அரசியல் விவாதம் நடைபெறும் முறையை நாம் வரவேற்கின்றோம்.

- எஸ்.சபேசன்

ஜேர்மனியில் அகதிகள் நிலை குறித்து துாண்டில் மூலமாக பார்க்கக் கூடியதாயுள்ளது. இங்கு(கனடாவில்) இன்னும் கொலை செய்யும் அளவிற்கு வரவில்லை. அரசியல் சட்ட ரீதியாக அகதிகள் நிலைமைகளை கெடுபிடியாக்கவுள்ளார்கள். உதாரணத்திற்கு



www.tamilarangam.net

ஜேர்மனி, அமெரிக்காவிலுள்ள அகதிகள் நிலையை இங்கு கொண்டு வருகிறார்கள். அகதி வாழ்வை விட வேறென்ன துயரம் இருக்க முடியும்.

உங்கள் புதிய முயற்சி இரவல் தூண்டில் வரவேற்கத்தக்கது. சரியான பொறுக்கிகள். ஒரு பத்திரிகை ஆசிரியர் சரியான பொறுக்கியாய் இருக்க வேண்டும். ஏனெனில் பலவற்றையும் தேடிப் பொறுக்கி வாசித்து, வாசித்தவையில் இருந்து பொறுக்கித் தன்னுடைய பத்திரிகையில் போட வேண்டும்.

– பா.அ.ஜயகரன்

✉ ✉ ✉ ✉ ✉

நீங்கள் நிதி பெறும் நிறுவனம் மதம் சார்ந்தது என்று கூறுவது சுயவிமர்சனம் அல்ல. அவர்கள் ஏன் உங்கள் நிறுவனத்திற்குப் பணம் தரவேண்டும்? அவர்கள் யார்? அவர்களது அரசியல் நோக்கம் என்ன? இவற்றை நீங்கள் விளக்கமாகக் கூறாது "சுயவிமர்சனம்" என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஏனென்றால் சில பிரச்சினைகளை நீங்கள் கிளப்பினால் போதும் என்பது அந்தப் பணம் தரும் நிறுவனத்தின் நோக்கமாக இருக்கும். விளைவுகள் பற்றி அவர்கள் அக்கறை காட்டாமல் இருக்கலாம். ஒரு உதாரணம்: "நொவீப்" என்ற ஒல்லாந்து நிறுவனம்தான் தமிழ் காந்தியத்திற்கும், சிங்கள சர்வோதயத்திற்கும் நிதி வழங்கியது. விளைவுகளை உங்களில் சிலர் நேரே பார்த்திருக்கவும் கூடும். எனவே பணத்தை ஏன் வழங்குகிறார்கள் என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

எங்கள் நாட்டு மக்களின் அன்றாட வாழ்வு சீர்குலைந்து சிறுவர்களும், சிறுமிகளும் கொலைக்கருவி ஏந்தி எதைச் சாதிக்கிறார்கள்? தங்களின் சொந்த வரலாறு தெரியாது பாரம்பரிய புலுடாக் கதைகளை "வியாபாரத்தில்" லாபம் தேடும் கோஷ்டிகள் விதைத்துவிட வழி தெரியாது ஒரு சமுதாயம் போய்க் கொண்டிருக்கிறது.

நாட்டுப் பற்றுள்ளவர்களாக இருக்க எமக்கு என்ன வேண்டும்

www.tamilarangam.net

என்று சிந்தியுங்கள். வரலாற்றின் - உண்மை வரலாறு. கள்ள உறுதியல்ல. - உண்மைநிலை புரிந்தால் சிங்களவரும், தமிழரும், முஸ்லீம்களும் இலங்கையில் தமக்குள் முட்டி மோதமாட்டார்கள். எங்கள் வரலாறுகளை நாமே ஆராய்ந்து எழுத வேண்டும். வெள்ளையர்களும், அவர்களுடைய எடுபிடிகளும் எழுதியதெல்லாம் எங்கள் "பெருமை மிக்க" வரலாறுகள் அல்ல.

- யோ.வின்சன்ட்

*கலம் 48இல் "உங்களுக்கு நாட்டுப்பற்று இருக்கிறதா?" என்ற கட்டுரையை எழுதிய யோ.வின்சன்ட் திரும்பவும் மிக நீண்ட கட்டுரையை அனுப்பியிருக்கிறார். இக் கட்டுரையிலும் இந்தியா பற்றிய அவர் பார்வையில் முன்னைய அவரின் கட்டுரையைவிட மாறுபாடான கருத்தில்லை. இதற்கான எமது பதிலிலும் மாற்றமில்லை. எனவே ஒரே விடயத்தைத் திரும்பவும் பிரசுரிக்காமல் தூண்டில் பற்றிய விமர்சனத்தை மட்டும் மேலே பிரசுரித்துள்ளோம். கருத்துச் சுதந்திர மறுப்பாக இதைக் கருதாமல் புதிய கருத்துகளுக்கு இடமளிப்பதாக யோ.வின்சன்ட்டும், வாசகர்களும் புரிந்து கொள்வீர்களென நம்புகிறோம்.*

*- கடலோடிகள்.*

மனிதாபிமானமும், துணிவும் நிறைந்த யதார்த்தக் கருத்துகளை உமிழ்வதில் தூண்டிலின் பங்கு கணிசமானது. கிழக்கிலும், மேற்கிலும் அடிகளை வருடி ஆக்கங்கள் வெளியாகும் இந் நாட்களில் தூண்டில் மேலும் சிறக்க வாழ்த்துகள்.

- மா.சி.விநாயகம்பிள்ளை

உங்கள் முயற்சிகள் இன ஒற்றுமையையும் வலியுறுத்துவதோடு, ஐரோப்பாவிலுள்ள தமிழ் உள்ளங்களையும் தட்டியெழுப்பி, அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுள் ஆக்கமும், ஊக்கமும் உள்ள பலரை இணங்கண்டு, உதிரிகளை ஒன்று சேர்த்து, ஆரோக்கியமான விவாதங்களை நடத்துவதோடு மட்டுமன்றி நடைமுறை சாத்தியமாக்கலையும் முன்னெடுத்து செல்வதே எமது மக்களின் விடுதலைப் பாதைக்கு வழிவகுக்கும் என நம்புகிறேன்.

- ந.இலங்கேஸ்வரன்

✉ ✉ ✉ ✉ ✉

தங்களின் கன்னி முயற்சியான இரவல் தூண்டில் கிடைத்தது. இரவல் தூண்டில் எனும் இப்படியொன்று பிற பிரசுரங்களைக் கொப்பி பண்ணித் தேவைதானா என்றால்... ஆம் என்று கூறாமல் யாரும் இருக்க மாட்டார்கள். அவ்வளவிற்குப் பொக்கிஷமாகிவிட்டது. ஏனெனில் வெளியாகும் பத்திரிகைகளில் பொறுக்கியெடுக்கப்பட்டுப் புடம் போடும் இரவல் தூண்டில் ஒரு பகீரத முயற்சியே.

இரவல் ஒன்று கொண்டு வந்த "ஐக்கியத்திற்காகப் போராடுவோம்..." எனும் ஆதாரபூர்வக் கட்டுரையில் புதைந்து பழசாகிவிட்ட எத்தனையோ ஈழமண்ணின் உண்மைகளை வெளிக்காட்டியிருந்ததைப் போற்றாமல் இருக்க முடியவில்லை. கிடைக்காமலிருந்த புதையல் ஒன்றை இரவல் தூண்டில் போட்டு எம்மிடையே ஒப்படைத்தமைக்கு நன்றி.

விமர்சகர்களிடமும், வாசகர்களிடமும் இரவல் தூண்டிலுக்கு இரவல் எடுத்த ஆக்கங்களைக் கேட்கலாம். இன்னும் விமர்சனப் பகுதி, கேள்வி-பதில் பகுதிகளையும் ஆரம்பித்தால் இரவல் தூண்டில் பொலிவடையும்.

- இளைய அப்துல்லாஹ் (இலங்கை)

✉ ✉ ✉ ✉ ✉

OOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOOO



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கள்ள(ர்) கூட்டு

சோவியத் யூனியனின் உடைவுக்கும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிக்கும் அந்தந்த நாடுகளின் அரச அதிகாரங்களைக் கையில் வைத்திருந்த தவறான தலைமைகள் காரணமாகியிருந்தமை அம்பலமாகியுள்ளன. தவறுகள் எங்கே? எப்படி ஆரம்பமாகின? வளர்ந்தன? என்பன இவற்றிலிருந்து படிப்பினைகள் ஆகியுள்ளன.

இதேவேளை சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நடந்த மாற்றங்களுக்கு ஏகாதிபத்தியங்களும், மதக் கும்பல்களும் எப்படிக் கூட்டாகச் சதி செய்தன என்ற தகவல்கள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன. எதிரிகள் எவ்வளவு கவனமாகவும், தீவிரமாகவும், தந்திரமாகவும் ஊடுருவி தமது நோக்கங்களைச் சாதித்துக்கொள்கிறார்கள் என்பதற்கு இது இன்னுமோர் எடுத்துக்காட்டு.

" புனிதக் கூட்டு " என்ற தலைப்பில் "Time" சஞ்சிகையில் பிரசுரமான கட்டுரையை "கள்ள(ர்) கூட்டு " என்று தலைப்பு மாற்றி தமிழில் பிரசுரிக்கின்றோம் - எதிரிகள் குறித்த எச்சரிக்கையைத் தருவதாக!

– கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1982ஆம் ஆண்டு யூன் மாதம் 7ஆம் திகதி திங்கட் கிழமை. வத்திக்கான் நூல்நிலையத்தில் இருவர் சந்தித்துக் கொண்டார்கள். இதுவரை சந்தித்திராத அந்த இருவரும் வேறு யாருமல்ல. அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன் (Ronald Regan), போப் இரண்டாவது யோன் போல் (Pope John Paul II) ஆகியோரே அந்த இருவருமாவார்! இவர்கள் சந்தித்து 50 நிமிட நேரம் உரையாடினார்கள். இவர்கள் தன்னந்தனியாக சந்தித்த இதே கட்டிடத் தொகுதியின் இன்னொரு பகுதியில் அகஸ்டினோ கார்டினல் கரோலியும் (Agostino Cardial Casaroli), மேற்றிராணியார் அச்சிலி சில்வஸ்ரினும் (Achille Silvertrini), அமெரிக்க அரசு செயலர் அலெக்ஸாண்டர் ஹெய்க் (Alexander Haig), றீகனின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் வில்லியம் கிளார்க் (William Clark) ஆகியோரைச் சந்தித்து பேசிக் கொண்டிருந்தனர். லெபனான் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் பற்றியே இவர்களது பேச்சின் பெரும் பகுதி இருந்தது. மறுநாளும் தொடர்ந்த இந்தப் பேச்சின்போது அவர்களுக்கு ஹெய்க் தெரிவித்தார்: " பிரதமர் மெனச்செம் பெகின் (Menachem Begin) தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கை லெபனானுள் 40 கி.மீ. தூரத்திற்கு அப்பால் போகப் போவதில்லை என்று என்னிடம் கூறியுள்ளார்"

ஆனால், போப்பும், றீகனும் தமது பேச்சில் லெபனான் பற்றிய இந்தப் பிரச்சினைக்கு மிகச் சிறிதளவு நேரத்தையே எடுத்திருந்தனர். பதிலாக, தம்மிருவரதும் நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான ஒரு விடயம் தொடர்பாக பேசுவதில் அவர்கள் கூடுதல் நேரத்தைச் செலவிட்டனர். அவ்விடயம் போலந்த் பற்றியதும், கிழக்கு ஐரோப்பாவில் சோவியத்தின் ஆதிக்கம் பற்றியதுமாகும். இச் சந்திப்பின்போது கொம்யூனிஸ சாம்ராச்சியத்தைக் கலைப்பதற்கான ஒரு எதிர்நடவடிக்கையை மேற்கொள்ளுவதில் போப்பும், றேகனும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். இது பற்றி றேகனின் தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் முதலாவது ஆலோசகர் றிச்சார்ட் அலன் (Richard Allen) இப்படித் தெரிவித்தார்: "இது நீண்டகாலமாக இருந்து வருகிற மிகமிக இரகசியமான கூட்டுக்களில் ஒன்றாகும் ".

போப்பாண்டவரின் பிறந்த இடமும், சோவியத்தின் கிழக்கைரோப்பியச் செய்மதிகளில் ஒன்றானதுமான போலந்த் மீது இந்த நடவடிக்கை குவியப்படுத்தப்பட்டது. 1981இல் இராணுவச் சட்டம்

www.tamilarangam.net

பிறப்பிக்கப்பட்ட பின்பும் சட்ட விரோத 'ஸொலிடர்நொஸ்க்' (Solidrnosc) இயக்கத்தை இயங் கவிடுவதும், போலந்த் அரசைச் சீர்குலைப்பதுமான 'பணிகளில்' தமது சக்திகளைப் பயன்படுத்திக் கூட்டாகச் செயற்பட்டால் சோவி யத்தின் சார்புத் தன்மையிலிருந்து போலந்த்தை உடைத்துவிட முடியு மென்பதில் போப்பும், றீகனும் உறுதியான நம்பிக்கை கொண்டி ருந்தனர்.

1989இல் சட்டபூர்வ அனுமதி கிடைக்கும்வரை 'ஸொலிடர் நொஸ்க்' இயக்கம் தலைமறை வாக இருந்துகொண்டே றீகன், போப் ஆகியோரின் 'மேலான கடைக்கண் பார்வையின் கீழ்' நன் றாக ஊட்டி வளர்க்கப்பட்டது. Fax மெஷின்(போலந்த்துக்கே முதன் முதலாக), அச்சியந்திரங் கள், ஒலிபரப்பிகள், தொலைபேசி கள், சிற்றலை றேடியோக்கள், வீடியோக் கமராக்கள், போட் டோக்கொப்பி மெஷின்கள், ரெல க்ஸ் மெஷின்கள், கொம்பியூட்டர் கள்... போன்ற உபகரணங்கள் தொன்கணக்கில் போலந்துக்குள் இரகசியமாகக் கடத்திவரப்பட் டன. மதகுருக்கள் மற்றும் அமெ ரிக்க ஏஜெண்டுகள், அமெரிக்க தொழிற்துறை அமைப்புகளின் பிர திநிதிகள் ஆகியோரினால் ஏற்ப டுத்தப்பட்ட வழிகளினூடாகவே இக் கடத்தல் நடைபெற்றது. தடைசெய்யப்பட்ட அமைப்பான 'ஸொலிடர்நொஸ்க்'க்குக்கான பணம் சி.ஐ.ஏ (C.I.A) நிதியிலி ருந்தும், ' சனனாயகத்திற்கான





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய ' நிதியிலிருந்தும் வத்திக் கானினதும், மேற்கத்தைய தொழிற்சங்கங்களதும் இரகசிய வங்கிக் கணக்குகளிலிருந்தும் வழங்கப்பட்டது.

லெச் வலேஸா (Lech Walesa), மற்றும் 'ஸொலிடர் நொஸ்க்' இயக்கத் தலைவர்கள் அனைவருக்கும் அடிக்கடி திட்டமிடல் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இவை மதகுருக்கள், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த - மாறுவேடத்தில் போலந்தில் வேலை செய்து கொண்டிருந்த - தொழில் நிபுணர்கள் ஆகியோரினூடாகவே வழங்கப்பட்டன. எதிர்ப்பு நடவடிக்கைகள் வளர, வளர போலந்த் அரசின் இரகசியத் தீர்மானங்கள், வார்ஸோ நடவடிக்கைகள் தொடர்பான சோவியத்துடனான போலந்த்தின் தொடர்புகள் என்பன பற்றிய தகவல்கள் மேற்குலகிற்கு அதிகமதிகமாகக் கிடைக்கத் தொடங்கின. தகவல்கள் மத குருக்களிடமிருந்து மட்டுமல்ல, போலந்த் அரசிலிருந்த உளவாளிகளிடமிருந்தும் வந்து கொண்டிருந்தன.

## *யால்ரா (Yalta)வின் வீழ்ச்சி*

யால்ரா தீர்மானப்படி நடந்த ஐரோப்பாவின் பிரிவு, மற்றும் சோவியத்தின் கிழக்கைரோப்பா மீதான ஆதிக்கம் என்பன மிக அடிப்படையான அரசியல் உண்மை என்பதை ரீகனும், போப்பும் ஏற்க மறுத்தனர். ஒரு 'சுதந்திரமான கொம்யூனிஸமற்ற' போலந்த் சோவியத் சாம்ராச்சியத்தின் மீதான பலத்த தாக்குதலாக இருக்கும் என்றும், போலந்த் 'கொம்யூனிஸத்திலிருந்து விடுபட்டால்', இதைப் பிற கிழக்கைரோப்பிய நாடுகளும் பின்பற்றுமென்றும் இருவரும் உறுதியாக நம்பினர்.

"யால்ராவில் ஒரு ' மாபெரும் பிழை' ஏற்பட்டுவிட்டதென்றும், அதைக் களைய ஏதாவது செய்யப்பட வேண்டும் என்றும் நாம் இருவரும் கருதினோம். 'ஸொலிடர் நொஸ்க்' இயக்கம்தான் இதற்குரிய ஒரே ஆயுதம் என்று எமக்குப் பட்டது. ஏனென்றால் அது போலந்த் தொழிலாளர்களின் அமைப்பாக இருந்தது. 'ஸொலிடர்நொஸ்க்' போன்ற ஒரு அமைப்பு ஒருபோதும் கிழக்கைரோப்பாவில் இருந்ததில்லை. சோவியத் யூனியன் அல்லது போலந்த் கொம்யூனிஸ்ட்டுகள் எதை விரும்புகிறார்களோ அதற்கு எதிரானவர்கள்தான் இந்த 'ஸொலிடர் நொஸ்க்' இயக்கத்தினர்" என்று ரீகன் இன்று சொல்கிறார்.

'ஸொலிடர்நொஸ்க்' தொடர்ந்தும் அழியாமல் இயங்குவதற்கு ரீகனும், போப்பும் 'கடமைப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடரும் கூட்டு...



வர்கள்' என்பது வலேசாவுக்கும், அவரின் சகாக்களுக்கும் தெரிந்தேயிருந்தது என்று 'ஸொலிடர்நொஸ்க்' தலைவர்கள் கூறுகிறார்கள். அதை இவர்களின் ஒத்துழைப்பின் மூலம்தான் அறியக் கூடியதாகவிருந்தது. "அமெரிக்காவும், கத்தோலிக்கத் திருச்சபையும் கூட்டாக வேலை செய்தார்களா என்று உத்தியோகபூர்வமாக எனக்கு தெரியாது" என்று கூறுகிறார் 'ஸொலிடர்நொஸ்க்' இரகசியமாக வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியரும், தற்போது வொஷிங்ரனில் இருக்கும் போலந்த் தூதுவராலயத்திலுள்ள உயர் இராஜதந்திரியுமான வொஜ்சிஎச் அடமிக்கி (Wojciech Adamiecki)!!. அவர் மேலும் கூறுகிறார்: "சோவியத் யூனியன் போலந்துள் ஊடுருவுமாயின் தான் போலந்திற்குப் பறந்து சென்று அம்மக்களுடன் இருப்பேன் என போப் சோவியத் யூனியனை எச்சரித்ததாக எங்கள் செவிகளுக்கு எட்டியது. இந் நேரத்தில் திருச்சபை முக்கிய உதவியாளராக இருந்தது. இது பகுதி இரகசியமாகவும், மிகுதி வெளிப்படையாகவும் இயங்கியது. திருச்சபையின் பகிரங்க நடவடிக்கைகளாக 'மனிதாபிமான உதவிகள்', உணவு, பணம், மருத்துவம், வைத்திய ஆலோசனை வழங்கப்படல் ஆகியன இருந்தன. அரசியல் நடவடிக்கைளுக்கு இரகசியமாக ஆதரவு வழங்கப்பட்டது. அதாவது எல்லாவிதமான அச்சுக்கூட இயந்திர விநியோகங்கள், இரகசியக் கூட்டங்களை ஒழுங்கு செய்தல் என்

www.tamilarangam.net

பன இருந்தன"

முதலாவது சந்திப்பில் றீகனும், போப் இரண்டாவது ஜோன் போல் உம் தங்களின் பொதுவான விடயம் பற்றிக் கதைத்தார்கள். 1981ஆம் ஆண்டு 6 கிழமைகள் வித்தியாசத்தில் இருவரையும் கொலை செய்ய எடுத்த முயற்சியிலிருந்து அவர்கள் தப்பியிருந்தார்கள். அத்துடன் தங்களை 'ஒரு பிரத்தியேகமான கடமையைச்' செய்வதற்காகக் கடவுள் காப்பாற்றியுள்ளார் என்று அவர்கள் நம்பினார்கள்!.

சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் றீகனும், போப்பும் ஒற்றுமைப்பாடான 'ஆத்மீகக் கண்ணோட்டமும்', பார்வையும் கொண்டிருந்தார்கள். அத்துடன் சரியோ, பிழையோ இறுதியில் தங்கள் 'புனிதமான திட்டத்தில்' வெற்றியடைவோம் என்று இருவரும் நம்பினார்கள் எனக் கூறுகிறார் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கினார்க்.

"றீகன் மிகவும் 'சாதாரணமானதும்', 'ஏற்றுக்கொள்ளக்', கூடியதுமானதுமான கொள்கைளைக் கையாண்டார். கொம்யூனிஸத்தின் வரப்போகும் வீழ்ச்சியை அவர் கண்டது ஓர் சரியான நோக்காகும். அத்துடன் அவ் வீழ்ச்சி விரைவில் ஏற்படுவதற்கு றீகன் தூண்டினார்" என்று கூறுகிறார் சி.ஐ.ஏ.யின் முன்னாள் உதவி அதிபரும், தற்போதைய அமெரிக்க இராணுவ அதிகாரியுமான பொபி இன்மான் (Bobby Inman). 1982ஆம் ஆண்டின் முதல் அரை வருடப் பகுதியில் 5 அம்சங்களை கொண்ட உபாயங்கள் தோற்றமாகின. இந்த உபாயங்களாவன சோவியத் யூனியனின் பொருளாதாரத்தை முறியடிப்பதற்கும், சோவியத் யூனியன் அதன் வாடிக்கையைக்கார வார்ஸோ (Warsaw) ஒப்பந்த நாடுகளுடன் வைத்திருக்கும் தொடர்புகளை உடைப்பதற்கும், சோவியத் யூனியனில் 'சீர்திருத்தங்களைத்' திணிக்கச் செய்வதற்குமான நோக்கங்களைக் கொண்டிருந்தன. இந்த உபாயங்களின் சாராம்சம் கீழ் வருமாறு:

00 ஏற்கெனவே அமெரிக்காவில் வளர்ந்து கொண்டிருக்கும் இராணுவப் பாதுகாப்பு அமைப்பின் 'நட்சத்திரப் போர்'(Star Wars) என்ற றீகனின் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதின் முக்கியமான தந்திரோபாய நோக்கம் இத் திட்டத்துடன் போட்டியிடுவதற்கான பெருந்தொகையான செலவை சோவியத் யூனியனுக்கு ஏற்படுத்துவதற்கேயாகும்.

00 கங்கேரி, செக்கோசெலவாக்கியா, போலந்த் ஆகிய நாடுக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளில் "சீர்திருத்தங்களைக்" கோரு ம் இயக்கங்களை உற்சாகப்படுத் துவதற்கான இரகசியமான நடவ டிக்கைகளில் ஈடுபடுவது.

00 வார்ஸோ ஒப்பந்த நாடுகளில் " மனித உரிமையைப் பாதுகாப்ப தற்கும் ", அரசியல் மற்றும் வர்த் தக வலைய நிலையங்களை உரு வாக்குவதற்குமான "சீர்திருத்தங் களைச்" செய்வதற்கான பண உதவி வழங்குவது.

00 பொருளாதார ரீதியில் சோவி யத் யூனியனத் தனிமைப்படுத்தல். ஜப்பான் மற்றும் மேற்கத்தைய நாடுகளிலிருந்து சோவியத் யூனி யனுக்குக் கிடைக்கும் தொழில் நுட்ப உதவிகளை நிறுத்துதல். 21ஆம் நூற்றாண்டில் சோவியத் யூனியன் தனது முக்கியமான வெளிநாட்டு வருமானத்தைப் பெற மேற்கத்தைய நாடுகளுக்கு கண் டங்களுக்கு ஊடாக குழாய் மூலம் இயற்கை வாயுவை அனுப்பி லாபம் பெறுவதை தடுத்தல். 1984 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி சைபீரியாவிலிருந்து பிரா ன்ஸ் வரையான 5,800 கி.மீ. நீளமான குழாய் திட்டமிட்ட நேரத்திற்குத் திறக்கப்பட்டாலும் எதிர்பார்த்ததிலும் பார்க்க குறை ந்த வருமானமே சோவியத் யூனி யனிற்குக் கிடைத்தது.

00 Voice of America, Radio Free Europe ஆகிய வானொலிச் சேவைகளின் மூலம் அமெரிக்கச் செய்திகளைப் பெருமளவில் கிழக் கைரோப்பிய மக்களுக்குக் கிடைக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

கச் செய்தது.

கிளஸ்நோஸ்ற் (Glasnost), பெறெஸ்ற்ரோறிக்கா (Peres troika) என்ற 'சித்தாந்தங்களின்' தந்தையான மிஹெயில் கொர்பச் சேவ் (Mikhail Gorbachev) 1982 இல் பதவிக்கு வருவாரென நீக னோ அல்லது போப்போ எதிர் பார்க்கவில்லை. கொர்பச்சேவி னால் மேற்கொள்ளப்பட்ட "சீர்திரு த்த நடவடிக்கைகள்" பலமுள்ள பல சக்திகளை அவரின் கட்டுப் பாட்டிலிருந்தே கட்டவிழ்த்து சோவியத் யூனியனைப் பிளக்கப் பண்ணியது. "வோஷிங்ரனுக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான உடன்படிக்கை கொம்யூனிஸத்தை வீழ்த்துவதற்கு காரணமாக இருக் கவில்லை. 'அதிஷ்டமுள்ள' ஏனை ய தலைவர்கள் போன்றே போப் பும், நீகனும் தங்கள் சக்தியை தங்களின் 'இறுதிக் குறிக்கோ ளிற்காகப்' பாவித்தார்கள்" என்கி றார் 'சொலிடர்நொஸ்க்'கை உயி ருடன் வைத்திருப்பதற்கான சதித் திட்டத்தின் விபரத்தை அறிந்த அமெரிக்க அதிகாரி ஒருவர்!!.

( தொடரும் )

தமிழில்: - ரவி + மனோ



அடுத்த கலத்தில்:

"அடக்குமுறை நடவடிக்கைகள்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நானும் எனது முகமும்



நினைவுகளுக்கும்
ஈழ நிகழ்வுகளுக்குமான
தூரம் எட்டிப் போயிற்று.

குளிர்தேசக் கதைகளால்
உணர்வுகளும்
உறைந்து போயிற்று.

இரட்சகர்களும்
மீட்பர்களுமே
நாட்டிலென்பதால்
மனிதம் மறைந்து போயிற்று.

ஆலையில், சாலையில்
விடுதி முலையில் என்று
எங்கள்
முகங்களும் ம(ை)றந்து போயிற்று.

கனதியான இரவில்
திடுமென்று விழிக்கையில்
மனம் மட்டும்
மறக்காமல் கேட்கும்
உனது
"நான்" எங்கு போயிற்று?


*

பாலா

www.tamilarangam.net




# வலதுகள் ஜாக்கிரதை !!!




ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி பாடன்வூற்றன்பேர்க் (Baden-Württemberg), ஷிலெஸ்வ்ரிக் ஹோல் ஸ்ரைன் (Schleswig-Holstein) மாநில அரசுகளுக்கான தேர்தல் முடிவுகள் பலருக்கும் அதிர்ச்சியளித்துள்ளன. தீவிர நிற-இன வாத நாஸிகள் மக்களின் "ஏகோபித்த" ஆதரவுடன் இத் தேர்தலில் பல ஆசனங்களைக் கைப்பற்றியுள் ளன.

பாடன்வூற்றன்பேர்க்கில் 'றெப்ஸ்' (Republikaner) என்ற நாஸிக்கட்சிக்கு 15 ஆசனங்களும், ஷிலெஸ்வ்ரிக் ஹோல்ஸ்ரைனில் 'டி.வி.யு'(Deutsche Volks Union) என்ற நாஸிக்கட்சிக்கு 6 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

'றெப்'கட்சிக்கு 5,38,866 வாக்குகளும், 'டி.வி.யு'கட்சிக்கு 93,302 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இத் தேர்தல் முடிவுகள் பற்றி எமக்குத் தெரிந்த ஜேர்மனியர்களுடன் கதைத்தோம். அவர்களின் பதில்களும் எங்களுக்கு அதிர்ச்சியாகவே இருந்தன.

" இது ஒரு எதிர்ப்பு அடையாளம். வெளிநாட்டு அகதிகள் தொடர்பான இந்த அரசின் கொள்கைக்கு தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக நாஸிகளுக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். "

" அகதிகளை மக்கள் விரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பவில்லை என்பதன் அடையாளமே இது "

" எனக்கு நாஸிகள் ஆட்சிக்கு வருவதில் உடன்பாடில்லை. ஆனால் எனது எதிர்ப்பை வேறு விதமாகவும் காட்ட முடியவில்லை. அதனாலேயே நாஸிகளுக்கு வாக்களித்தேன். "

" அரசாங்கத்தாலோ, எதிர்க்கட்சிகளினாலோ ஒன்றும் செய்ய முடியவில்லை. அகதிகள் தொடர்ந்து வந்து குவிந்து கொண்டேயிருக்கிறார்கள். நாஸிகளால்தான் இதற்கு ஏதாவது செய்யமுடியும். "

இந்த அபிப்பிராயங்களைக் கேட்ட பின்பு நானும், நண்பருமாக தேர்தலின் பின் வெளியான பத்திரிகைகள், சஞ்சிகைகளைச் சேகரித்து படித்துப் பார்த்தோம். நாஸிகள் வெற்றியடைந்த இரண்டு மாநிலங்களிலிருந்தும் வாக்காளர்களைப் பேட்டி கண்டு பெரும்பாலான பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. அப் பேட்டிகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் முழுக்க முழுக்க அரசியல் தஞ்சம் கோரிய அகதிகளுக்கும், வெளி நாட்டவருக்கும் எதிரானதாகவே இருந்தன.

"வேலைத் தளங்கள் முழுக்க வெளிநாட்டவர்களே நிறைந்திருக்கிறார்கள். எங்களுக்கு வேலை இல்லை." - வேலையற்ற இளைஞன்.

"பஸ் நிலையத்திற்குப் போனால் முழுக்க வெளிநாட்டவர் தான். பஸ்ஸில் போகும்போது நான் தான் ஒரு வெளிநாட்டில் இருப்பதைப் போல உணருகிறேன்" - விற்பனை நிலைய ஊழியர்.

"ரிக்கற் இல்லாமல் ஏறுகிறார்கள். கதைத்தால் அவர்கள் தங்களுடைய மொழியில் கத்துகிறார்கள். பொலிஸிடம் பிடித்துக் கொடுத்தாலும் அபராதம் அறவிட முடியாது. அவர்கள் சமூக உதவி பணத்தில் வாழ்கிறார்கள். அதுவும் எங்களுடைய பணம்தான்." - புகையிரத ரிக்கற் பரிசோதகர்.

"முழு அழுக்குகளும் எங்கள் நாட்டுக்குள் வந்துவிட்டன." - ஓய்வூதியக்காரர்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் அரசியல் தஞ்சம் கோரிய அகதிகள் மீதான வெறுப்பும், எதிர்ப்புணர்வும் ஒரு திட்டமான கருத்தைப் பெற்றுவிட்டன. இதற்கு வலதுசாரி, போலி இடதுசாரிக் கட்சிகளும், வியாபாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி சேவைகளுமே முக்கிய பங்காற்றியுள்ளன. இக் கருத்தாக்கத்திற்கு வடிவம் கொடுப்பதாகவே தேர்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லில் நாஸிகளின் வெற்றியும், இதனைத் தொடர்ந்து புதிய,புதிய நாஸிக் கட்சிகளின் உருவாக்கமும். அகதிகள் மீதான வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன. புதிதாக உருவாகியுள்ள நாஸிக்கட்சிகள் "தடை செய்யப்பட்டுள்ள" சின்னங்களையும், கொடிகளையும் தங்கள் கட்சிச் சின்னங்களாகவும், கொடிகளாகவும் பயன்படுத்துகின்றன. ஹிட்லரின் சுலோகங்களையே தங்களின் சுலோகங்களாகவும் கொண்டுள்ளன.

பொன் (Bonn) நகரிலுள்ள கருத்தெடுப்பு நிறுவனம் (BII) வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழுள்ள தகவல்கள் அடங்கியுள்ளன:

" நடந்து முடிந்த தேர்தல்களில் Republikaner, Deutsche Volks Union என்ற இரண்டு நாஸிக் கட்சிகளுக்கும் வாக்களித்தவர்கள் கடந்த காலங்களில் CDU, SPD கட்சிகளுக்கு வாக்களித்தவர்களே. நாஸிகளுக்கு வாக்களித்தவர்களில் எல்லா வகுப்பினரும் அடங்குவர். 25 வயதிற்குட்பட்ட எல்லோரும் நாஸிகளுக்கே வாக்களித்துள்ளனர். தங்கள் வாக்குகளை நாஸிகளுக்கு வழங்கியதற்கு இந்த வாக்காளர்கள் அனைவரும் தெரிவிக்கும் காரணம் ஒன்றே. அது ASYL (அரசியல் தஞ்சம்)!

அகதிகள் மீதான எதிர்ப்பின் உணர்ச்சிப்போக்கை அகதிகள் மீதான வன்முறைகளிலும் அவதானிக்க முடிகிறது. இவ் வருடத்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் சனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய 3 மாதங்களில் மட்டும் அகதிகள் தாக்கப்பட்ட 600 சம்ப வங்கள் பொலிஸில் பதிவாகியுள் ளன. இது 1991இல் இதே காலப் பகுதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களைவிட 400 வீதம் அதிகமானதாகும். அகதிகளைத் துன்புறுத்துகின்ற சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்களில் 80 வீதமா னவர்கள் 20 வயதிற்குட்பட்டவர் களே. தாக்குதலில் ஈடுபடும் ஒவ் வொரு நான்காவது நபரும் வேலையற்றவராக இருக்கிறார்.

இந் நிலைமையின் அபாய த்தை உணர்வதற்குப் பதிலாக இனவாத-நிறவாத வெறியைக் கிளறி, வன்முறைகளைத் தூண்டி விடுவதே பெருமளவில் நடந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சி யின் அமைச்சர்கள் பொதுக் கூட் டங்களிலும், பத்திரிகை அறிக்கை களிலும் பயன்படுத்துகின்ற வார்த் தைப் பிரயோகங்களைப் பாருங் கள்:

"அகதிகள் அற்ற வலயம்"
(Asylanten Freie Zone)

"பொருளாதார ஒட்டுண்ணிகள்"
(Wirtschafts schmarotzern aus der ganzen Welt)

"பல்குற்றவியலாளர் சமுகம்"
(Multikriminellen Gesellschaft)

"தாறுமாறான இனக்கலப்பு"
(durchraßtenn Geselschaft)

ஆடுகளை விரட்டுவதற்கு எல் லோரும் சேர்ந்து ஓநாய் வளர்க் கிறார்கள். ஓநாய்கள் திரும்பிப் பாயும்போதுதான் புரிந்து கொள் வார்களா?

– ரா.சி

---

## ஒரு வருடம் இலவசம் !!!

*ஜேர்மனிய அரசு புதிய வீடு கள் கட்டும் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளது. இதன் மூலம் ஏற் பட்டுள்ள வீடில்லாத் திண்டாட்டத் திற்கு அகதிகளைக் காரணமாக் கியுள்ளது.*

*மறுபுறத்தில், ஏராளமான அறைகளைக் கொண்ட வீடுகளை சும்மா பூட்டிவைத்துவிட்டு வேறு நாடுகளில் தங்கள் பொழுதுகளை உல்லாசமாகக் கழித்துக் கொண் டிருக்கிறார்கள் கொழுத்த பணக் காரர்கள்.*

*72 ஆம்பக்கத்திலுள்ள படத் தில், 2 அல்லது 3 அறையுள்ள வீட்டைத் தனக்கு வாடகைக்குத் தருபவர்களின் காரை வாரத்தில் ஒரு தடவைப்படி ஒரு வருடத்தி ற்கு இலவசமாகக் கழுவித் தருவ தாக எழுதப்பட்டுள்ள அட்டையை ஒரு தொழிலாளி வைத்திருக்கிறார்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பரதேசியின் பார்வையில் தேசத்தின் குறிப்புகள்.

( கலம் 50இன் தொடர்ச்சி )

*நிர்ம:* புலிகள் இராணுவத்தை முகாமுக்கை தடுத்து வைத்திருக்கினம் எண்டதை வைச்சு பாக்கேக்கை இது ஒரு தடுப்புயுத்தம். இதிலை சனங்களின்ரை நலன் பிணைஞ்சிருக்கு.

*மார்:* முகாமுக்கை தடுத்து வைச்சிருக்கினம் எண்ட கேள்விக்கு இண்டைய நிகழ்வுகள் பதில் சொல்லுது. ஆனா 'தடுத்து வைக்கப்பட்டிருந்தது' புலியின்ரை நலனுக்காகத்தான்.

*நிர்ம:* எதை வைச்சுச் சொல்லுறியள்?

*மார்:* தடுத்து வைக்கப்பட்டிருக்கேக்கை என்ன நடந்தது? ஆமியின்ரை தடைமுகாம்கள் இருந்த இடத்திலை புலித்தடை முகாம்கள். அதே சோதனை, அதே கொள்ளையடிப்பு(புரட்சியின் பெயரால்), அதே சித்திரவதை, அதே கொலைகள்... இதைவிட 'தமிழீழச் செம்மல்' பற்றிய பிரசங்கம். சுருங்கச் சொன்னால் ஒரு காட்டுமிராண்டிச் சமுகத்தை வளர்த்தெடுப்பதில் புலிக்கு உதவியிருக்கு. ஆனா இன ஒழிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. அது நடந்துகொண்டேயிருக்குது. மறுபுறத்திலை புலியன் சுதந்திரமா திரிஞ்சு ஏனைய முற்போக்குச் சக்திகளை அழிப்பதற்கு உதவியிருக்குது. மற்றும்படி இந்தத் 'தடுப்பு' பெரிசா ஒண்டையும் சாதிக்கேலை.

*நிர்ம:* இந்த யுத்தத்திலை மக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின்ரை நலன் கிஞ்சித்தும் இல்லை எண்டுறீங்களோ?

*மார்:* ஓம். ஒரு தேசிய இனம் முற்றாகத் தன்னை ஒடுக்குமுறையிலிருந்து விடுவிச்சுக் கொள்ளுமாயிருந்தாலும் பரவாயில்லை. அது ஒரு வர்க்க முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தும் எண்ட அடிப்படையிலை புலியின்ரை நலனோடை சனங்களின்ரை நலனும் சேர்ந்திருக்கும் எண்டு சொல்லலாம். இது ஒண்டுமில்லாம ஒடுக்குகின்ற பெரும்பான்மை அரசின் வடக்கு-கிழக்கு பாதுகாவலர்களாக, ஒரு பியோனாக எமது பிரதிநிதிகள் வருவதில் ஒண்டுமேயில்லை. கடந்த காலத் தலைமைகளின் பாணியில் "அங்கே தண்ணியில்லை", "எண்ணெய் இல்லை" என 5 நட்சத்திர ஹோட்டலிலிருந்து அறிக்கை விட வேண்டியதுதான். எமது உரிமைகள் எல்லை பிரிப்பதிலேயோ, அறிக்கையில் எழுதி எலி அரிக்கவிடுவதிலையோ இல்லை. அடிப்படைப் பிரச்சினை பொருளாதாரத்திலை தங்கியிருக்குது.

*நிர்ம:* இருந்தாலும் எமது அடிப்படைப் பிரச்சினையை உணர்ந்திருக்கினம் தானே.

*மார்:* விளங்கியிருக்கினம் எண்டதல்ல, எதுக்கு முக்கியத்துவம் குடுக்கினம் எண்டு பார்க்கவேணும். புலி இயக்கம் குறித்த அலட்டல்களைவிட ஒவ்வொரு தேசத்தின் குறிப்புகளிலும் ஒரு பக்கம் விவாதத்திற்குரிய கருத்தாக வந்துதில்லை. மிச்சம் முழுக்க அலட்டல் தான்.

*நிர்ம:* அப்ப புலி இயக்கத்திற்கும் ஏனைய இயக்கங்களுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லையெண்டுறியளோ?

*மார்:* அடிப்படையிலை எந்த முரண்பாடும் இல்லை. இருப்புப் பற்றிய பிரச்சினையிலை தமிழ்த் தேசிய இனத்தையோ ஏனைய சிறுபான்மை இனத்தையோ ஒடுக்குவதற்கான அதிகாரத்தை ஏனைய இயக்கங்கள் பகிர்ந்துகொள்ளத் தயார். ஆனால் புலி தயாரில்லை. இதுதான் வித்தியாசம்.

*தவம்:* தேசிய இனம் பிரிந்துசெல்லல் எண்டு கதைக்கேக்கைதான் ஞாபகம் வருகுது பிரஜைகளும் தேசிய விடுதலைப் போராட்டம் தான் சாத்தியம் எண்டு சொல்லுயினம்.

*மார்:* ஓம். இதெல்லாம் புதிய பூர்சுவாக்கள் உருவாகிக்கொண்டு வருகினம் எண்டதைத்தான் காட்டுது. கடந்தகால தேசிய விடுதலைப் போராட்ட அலைகள் செய்தது முழுக்க இளவாதத்தை வளர்த்துவிட்டதுதான். ஒட்டுமொத்த சிங்கள மக்களையுமே பொது எதி

www.tamilarangam.net

ரியாக காட்டிநிண்டது.

*நிர்ம:* அவர்கள் நடத்தினது வேறை. நாங்கள் நடத்தப் போறது வேறை.

*மார்:* அது சரி. சிங்கள மக்களின்ரை நலனிலை எவ்வளவு அக்கறையாக இருக்கிறம் எண்டு பிரஜைகளின்ரை குறிப்புகள் வடிவாய் எடுத்துக் காட்டுது.

*நிர்ம:* எதை வைச்சுச் சொல்லுறியள்?

*மார்:* தமிழ்மக்கள் மீதான இலங்கையரசின் ஒடுக்குமுறையையும் , புலிகளின் சுயலாபம் தேடும் யுத்தத்தையும் பற்றி பக்கம் பக்கமாக எழுதித்தள்ளும் பிரஜைகள் மறுபக்கத்திலை சிங்கள முற்போக்குச் சக்திகள், கட்சி சார்ந்தவர்கள், பொது மக்கள் என குறிப்பிட்ட காலத்துக்கிடையில் 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் கொல்லப்பட்டும் குறிப்பில் பெரிதுபடுத்தப்படுவதில்லை. இதுவுமில்லாம எனைய தேசிய இனங்களின்ரை இருப்பை அங்கீகரிக்காமல் தங்களது பாரம்பரிய பிரதேசங்களிலை இருந்து முஸ்லீம்களை கொன்றும், கொள்ளையடித்தும் விரட்டியடித்த புலிகளுக்கு ஐக்கிய முன்னணி அமைத்துப் போராடினால் ஒழிய விடுதலை சாத்தியமில்லை என அறிவுரை கூறுயினம். தமிழ் எழுத்துகள் வெறுமனே தமிழுக்குள் முடங்கி விடாமலும், தமிழ் மக்களுடைய போராட்ட உணர்வுகள் தமிழ் மக்களுக்குள் குறுகிவிடாமலும் சர்வ



*"எங்கள் ஆட்சியில் என்ன சாதனை செய்திருக்கிறோம் என்று கேட்கிறார்கள். ஐக்கியநாடுகள் சபை ஆய்வுக்குட்படுத்திய நாற்பது நாடுகளிலே எங்கள் நாட்டில்தான் அதிக எண்ணிக்கையில் ஆட்கள் காணாமற் போயிருக்கிறார்கள் என்பதை இவர்கள் அறியாதவர்கள் போல் நடிக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன்"*

*- வைத்தி*

www.tamilarangam.net

தேசம் நோக்கி நகரவேண்டும் எண்டு பேர்லினில் நடந்த ஐரோப்பிய தமிழ்மகாநாட்டில் ஒரு ஜேர்மன்காரரர் பேசினார் கவனிச்சீங்களோ.

*நிர்ம:* ஓம். கவனிச்சனான்.

*மார்:* அந்த ஆளின்ரை சிந்தனைப் போக்கையும், எங்கடை சிந்தனைப் போக்கையும் ஒப்பிட்டுப் பாக்கேக்கை நாங்கள் அப்பட்டமான இனவாதிகள் எண்டு விளங்கேலையே. நாங்கள் ஒரு மனிதனாக நின்று பிரச்சினையை அணுகப் பார்க்க வேணும், தமிழனாக நிண்டு பிரச்சினையைப் பாக்க வேணும் எண்ட நிலை இருககிற உணர்வு, வேகம் 'மனிதனாக' நிண்டு ஒவ்வொரு பிரச்சினையையும் பாக்கிறதிலை இல்லை. பெரும்பாலும் இஞ்சவாற சஞ்சிகைகள் கூட புலிகளால் கொல்லப்பட்ட சிங்கள மக்களுக்காக கண்ணீர் வடித்தார்களேயன்றி (அதுவும் புலிகளைத் தாக்க வேண்டும் என்பதற்காக) மற்றும்படி அரசின் சிங்கள மக்கள் மீதான படுகொலைகள், ஒடுக்குமுறைகள் வெறும் 'செய்திக் குறிப்பில்' தன்னை மறைக்கும்.

*நிர்ம:* அது சரிதான். ஆனா இப்ப நாங்கள் சிங்கள மக்களுக்காகக் குரல் கொடுக்கேலாது. ஏனெண்டா சிங்கள மக்களோடை இணைந்து ஐக்கிய இலங்கைக்காக போராடுற அளவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் முற்போக்குச் சக்தியில்லை.


*தவம்:* உங்கடை விடுதலைக்கு மட்டும் சிங்கள மக்கள் குரல் கொடுக்க வேணும். ஆனால் சிங்கள மக்களுக்கு போராட குஞ்சியப்பர் வருவாராக்கும். என்ன விளையாடுறியளோ?

*மார்:* எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு தேசிய இனத்திலும் முற்போக்குச் சக்திகள் இல்லையெண்டு யாராவது சொல்லுவினமா இருந்தா அது ஒரு சேறடிப்புத்தான். இந்த வளர்ச்சியடைஞ்ச நாட்டிலை கூட தனி நபர்களாகவும், சிறு சிறு குழுக்களாகவும் எவ்வளவு இருக்கு. இந்தக் குழுக்களோடை குர்திஸ் தான் குழுக்களோ, பலஸ்தீனியக் குழுக்களோ இணைந்து வேலை செய்யிற அளவுக்கு எங்கடை இயக்கங்கள் கிட்டப் போகேலுமே. இதை நேர நாங்கள் கண்டுகொண்டுதானே இருக்கிறம். சிங்கள முற்போக்குச் சக்திகளோ, சர்வதேச முற்போக்குச் சக்திகளோ தன்னை இனங்காட்டிக் கொள்வதற்கு அல்லது எம்முடன் இணைந்து வேலை செய்வதற்குரிய அரசியல் நிலைப்பாடுகளை, அணுகுமுறைகளை, வேலைத்திட்டங்களை முன்வைத்திருக்கிறோமா. ஐக்கிய இலங்கைக்கான போராட்டம் என்பது உடனடியாக தேசிய இனங்களிலுள்ள முற்போக்குச் சக்திகள் ஐக்கியப்படு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வது சாத்தியமில்லைத்தான். எமக்குள்ளே உள்ள உடன்பாடுகளுடன் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதற்கு ஐக்கியப்படுவதுபோல ஏனைய இனங்களின் முற்போக்குச் சக்திகளுடன் குறிப்பிட்ட மட்டத்தில் ஐக்கியப்படலாம். எமது கோரிக்கைகளும், நடவடிக்கைளும்தான் இந்த ஐக்கியத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்க முடியும் என்டு நினைக்கிறேன். இலங்கையில் ஏற்படுகின்ற விடுதலையானது இலங்கை மக்களுக்கானது. எமது உணர்வும், போராட்டமும் இலங்கை மக்களுக்குரிய விடுதலைக்கானதாக இருக்க வேணும். எமது அடிப்படைப் பிரச்சினை நாம் பிரிந்து போவதில் அடங்கியிருக்கேலை என்டதை முதலில் புரிஞ்சுகொள்ள வேணும். எங்கடை போராட்டம் ஏகாதிபத்திய, தரகுமுதலாளித்துவ அரசுக்கெதிரானது. அனைத்து மக்களையும் ஒடுக்குமுறையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் விடுவிப்பதற்கானது. அது சிங்கள மக்களாய் இருந்தாலென்ன? முஸ்லீம் மக்களாயிருந்தாலென்ன? தமிழ் மக்களாயிருந்தாலென்ன?

*தவம்:* கடந்தகால இயக்கங்கள் குறித்து தெளிவு இருக்கேயொழிய அடுத்த கட்டம் என்ன என்டது பற்றி தெரியாமக் கிடக்கு. ஏன் தேசிய இனங்கள் பிரிஞ்சு போகப் போராடினால் என்ன?

*மார்:* ஒரு தேசிய இனம் விரும்பினால் பிரிந்து போவதற்கான உரிமையை அங்கீகரிக்க வேணும். ஆனா அதே நேரத்திலை இனங்களின்ரை

www.tamilarangam.net

இணைவை வலியுறுத்த வேணும். இண்டைய காலகட்டத்திலை தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தின் பிடிகளுக்குள் சிக்குப்படுவதும், இனவாதம் பல வழிகளில் கிளைவிடுவதற்கும்தான் பயன்படுது.

*நிர்ம:* நாங்கள் முஸ்லீம் மக்களுக்கும், மலையக மக்களுக்கும் உரிமையைக் குடுப்பம்.

*மார்:* உரிமையள் யாராலும், யாருக்கும் கொடுக்கிறேல்லை. அது எடுக்கிறது. அதை எடுக்க வெளிக்கிடும்போது ஏற்படும் தடைகளை அகற்றத்தான் போராட்டம். அவை யின்ரை உரிமையைக் குடுக்கிற துக்கு நாங்கள் யார்?

*நிர்ம:* தேசிய இன ஐக்கியம் எண்டுபோட்டுத்தான் யுகோஸ்லலாவியவில நாறிப் போய்க் கிடக்கினம் பாக்கத் தெரியேல்லையே.

*மார்:* தொலைநோக்கான பார்வையைக்கொண்ட ஒரு ஆள் கதைக்கிற கதையில்லை இது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கான அமைப்பு சுரண்டலற்ற அமைப்பு. இந்த அமைப்பை யார் நிர்வகிக்கிறார்கள்? நிர்வகிப்பு கைமாறும்போது யார் வருகிறார்கள்? இந்த அமைப்புமுறைக்கான சித்தாந்தம் அந்த மக்களுக்கு உணர்வுபூர்வமாக போதிக்கப்படுகின்றதா? அந்த அமைப்பு மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்கு எப்படி முகம் கொடுக்கிறது? என்பன இந்த அமைப்பு உயிர் வாழ்வதற்கான அடிப்படைகள். இந்த அடிப்படைகளை வைத்துப் பார்க்கும்போது ஒரு பிரச்சினை இவற்றையும் மீறித் தலைதூக்குதெண்டால் இந்த அடிப்படையிலை ஏதோ சிக்கல் ஏற்பட்டிருக்கவேணு ம். வர்க்க உணர்வுள்ளவன் பிரச்சினைக்கான காரணங்களை இந்த அடிப்படைக் குள்ளிருந்து ஆராய்ந்து அனுபவமாக்கி கொள்வானேயன்றி குழந்தைத் தனமாக தேசிய இனங்கள் இணைஞ்சு வாழமுடியாது எண்ட முடிவுக்கு வரமாட்டான். அப்படி ஒருவர் முடிவெடுப்பாராயிருந்தால் இண்டைய சோசலிச நாட்டின் பொருளாதார முரண்பாடுகளைக் காரணம் காட்டி 'சோசலிசம் சாத்தியம் இல்லை', 'முதலாளித்துவமே நிலையானது' எண்ட முடிவுக்கும் வரவேணும்.

*நிர்ம:* இப்ப கொஞ்சம் கொஞ்சம் விளங்குது. ஆனால் நீங்கள் ஐக்கிய இலங்கைதான் சாத்தியம் எண்டு சொல்லுறியள்.

*மார்:* ஐக்கிய இலங்கைதான் 'சாத்தியம்' எண்டு சொல்ல வரேல்லை. ஐக்கிய இலங்கையா, தேசிய விடுதலைப் போராட்டமா எண்ட இரண்டிலுமே ஆரோக்கியமான விவாதம் நடத்தப்படேலை. சோசலிச

www.tamilarangam.net

நாடுகள் எண்டு சொல்லிக்கொண்ட நாட்டில் நடைபெற்ற தேசிய இனச் சிக்கலை முடிமறைத்து தேசிய இனங்களின்ரை ஐக்கியத்தை வலியுறுத்தும் மரபுவாத மாக்சியவாதிகளும், தேசிய இனச் சிக்கல்களை அந்த அமைப்புமுறையில் நடந்த முரண்பாடுகளை ஆராய்ந்து அதை அனுபவமாக்கி தம்மை வளர்த்துக் கொள்வதற்கு மாறாக தேசிய இனங்கள சேர்ந்து வாழமுடியாது எண்ட முடிவுக்கு வருவோரும்தான் அதிகம். எங்களிட்டை இருந்து இனவாதம் சிறிது விடுபட்டாலும் பெரும்பாலும் இனவிடுதலை என்ற கோஷம்தான் மேலோங்கி நிற்குது. ஆனால் நான் சொல்லவாறது என்னெண்டால் வர்க்க சக்திகள் தேசிய இனங்களின் ஐக்கியத்தை வலியுறுத்தி தமது வேலைத்திட்டத்தை வகுத்துச் செயற்படவேணும் எண்டதுதான். சரியான கருத்தையும், செயற்பாட்டையும் எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. மெதுவாக நகர்ந்தாலும் போராட்டம் ஆரோக்கியமான சமுக மாற்றத்தை நோக்கித்தான் நகரும்.

*நிர்ம:* நான் சொல்ல வந்ததை நீங்கள் சொல்லவிடாமலே துவங்கியிட்டியள்.

*மார்:* என்ன?

*நிர்ம:* நீங்கள் இப்பிடிச் சொல்லுறியள். வடக்கு கிழக்கிலை மார்க்சிய நூல்களிலை குறிப்பிடுற பாட்டாளிவர்க்கம் இல்லை எண்டு அடித்துச் சொல்லலாம் எண்டினம் பிரஜைகள். அதென்ன மார்க்சிய நூல்களில் குறிப்பிடுற பாட்டாளிவர்க்கம்? அப்பிடியொரு பாட்டாளிவர்க்கம் இருக்கோ?

*மார்:* இது பிரஜைகளிலை பச்சையாகவே தெரிகிற குட்டிமுதலாளித்துவக் குணாம்சம்தான். மார்க்சிய நூல்களில் உள்ள பாட்டாளிவர்க்கம் எண்டு வித்தியாசமான பாட்டாளி வர்க்கம் ஒண்டுமில்லை. இதெல்லாம் வாசகர்களுக்குப் பிரஜைகள் கொடுக்கிற ஒருவகை பேதி மருந்துதான்.


*நிர்ம:* அப்ப என்ன?

*மார்:* இலங்கைப் பாட்டாளி வர்க்கம் குறித்துத் தெளிவாக வரையறுக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை. ஆனால் பாட்டாளி வர்க்கத்தில நிறுவனப்பட்ட பாட்டாளி வர்க்கம், நிறுவனப்படாத பாட்டாளி வர்க்கம் எண்டிருக்கு. வடக்கு-கிழக்கில் பாட்டாளிகள் இல்லையென்றால் சுரண்டல் இல்லை, முதலாளிகள் இல்லை, அது ஒரு சோசலிஸப் பிராந்தியம் என்ற முடிவுகளை மறைமுகமாகப் பிரஜைகள் ஏற்றுக்கொள்கிறார்கள். அப்பிடியெண்டால் உழைத்தும் வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருப்பவர்களும், குடாநாட்டு

www.tamilarangam.net

## "பாட்டும், படமும்"

கேட்டதும் கொடுப்பவனே
கிருஷ்ணா கிருஷ்ணா...




கொழுத்தவர்களின் வயல்களில் நின்று கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளில் அற்பக் கூலிக்கு உழைப்பை விற்பவர்களும், கடலையே நம்பி உயிரைப் பணயம் வைத்து சம்மட்டிகளுக்கு உழைத் துக் குடுப்போரும்... பிரஜைகளுக்கு பரதேசிகளாகத் தெரிகிறார்கள் போலும்.

*தவம்:* உது வேறொன்றுமில்லை. அப்பட்டமான குடாநாட்டுக் குணாம் சமுடைய பிரஜைகள்தான் எழுதியி னம் போல கிடக்கு.

*மார்:* இது தேசத்தின் குறிப்பல்ல. அப்பட்டமான 'குடாநாட்டுக் குறிப் புகள்' தான்.

*நிர்ம:* அப்ப ஏன் தேசத்தின் குறிப்பு எண்டு பெயர் வைச்சவை?

*மார்:* இலங்கையரசு ஜனனாயக சோசலிஸக் குடியரசு எண்டு பெயர் வைச்ச மாதிரித்தான்.

*** வி.நடராஜன் ***

---

*இக் கட்டுரை தூண்டில் மீது வைத்துள்ள விமர்சனம் குறித்தும், வேறு சில விமர்சனங்கள் குறித் துமான எங்கள் கருத்துநிஆம் பக்கத்தில்.*

*- கடலோடிகள்*

www.tamilarangam.net

கேட்டோம் கண்டோம் உரைத்தோம்

# கொலை அங்கே, குரல் இங்கே.

வெள்ளை ஆடை அணிந்திருந்தவன் பறையடித்துக்கொண்டு முன்னால் போகிறான். அவன் பின்னே 3 சிறுமிகள் நீள வெள்ளை அங்கிகள் போர்த்தியபடி போய்க்கொண்டிருக்கிறார்கள். சிறுமிகளுக்குப் பின்னால் 6 பெண்கள் தலையில் மூவர்ணத் துண்டு கட்டியிருக்க, விரல்களினால் வெற்றி என்று காட்டுகிறார்கள். இவர்களையடுத்து சுலோகங்கள் எழுதப்பட்ட நீளத்துணியை ஒரு முனையில் ஜேர்மனியனும், மறு முனையில் ஆபிரிக்கனுமாகப் பிடித்திருக்கிறார்கள். இவர்களின் பின்னால் சுமார் 1,000 பேர் இடையிடையே சுலோக அட்டைகளைத் தாங்கிப் பிடித்தபடி வருகிறார்கள்.

"ஜேர்மனிய ஆயுதங்களும், பணமும் உலகம் முழுவதும் மக்களை கொலை செய்கிறது"

"500 ஆண்டுகள் போயும் காலனித்துவம் போய்விடவில்லை"

"அமெரிக்காவே, நேட்டோவே குர்திஸ்தானை விட்டுவெளியேறு"

"துருக்கியில் ஜேர்மனியப் பாஸிஸம்"

"துருக்கிய இராணுவமே குர்திஸ்தானை விட்டு வெளியேறு"

"நேற்று வியட்நாம், இன்று குர்திஸ்தான்"

www.tamilarangam.net

டொச்சில் கோஷங்கள் ஓங்கி ஒலிக்கின்றன. துருக்கிய அரசால் குர்திஸ்தானிய மக்கள் கொல்லப் படுவதைக் கண்டித்தும், குர்திஸ் தான் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் 'அஸ்ரா' என்ற பல்கலைக்கழக மாணவர் அமைப்பினால் ஒழுங்கு படுத்தப்பட்ட அந்த ஊர்வலம் ஜேர்மனிய நகரின் பிரதான தெருக்களின் ஊடாகப் போய்க் கொண்டிருக்கிறது.

பி.கே.கே. (P.K.K.), என்ற குர்திஸ்தான் விடுதலை இயக்கம், ரி.கே.பி.(எம்/எல்) T.K.P.(M/L) என்ற துருக்கி கொம்யூனிஸ்ட் கட்சி, ஜேர்மனி பாஸிஸ எதிர்ப்பு இயக்கம் உட்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இவ் வூர்வலத்தில் கலந்திருந்தனர்.

தெருவில் நின்ற ஜேர்மனியர் பலர் ஊர்வலத்தைப் பார்த்து முகத்தைச் சுளித்தார்கள். "துருக்கியில் ஜேர்மனியப் பாஸிஸம்" என்ற கோஷம் ஒலித்தபோது வீதி ஒழுங்கைக் கவனித்துக் கொண்டிருந்த பொலிஸ்காரர்களின் முகங்கள் சிவந்துகொண்டன. ஆர்பாட்ட கோஷங்களுடன் ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது.

ஜேர்மனியில் தமிழ் இயக்கங்களால் (புலி, புளொட்) ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலங்களில் எனது ஆரம்பகால அரசியல் அறிவின் பிரகாரம் கலந்து கொண்டிருக்கிறேன். அவற்றுடன் இப்போது கலந்துகொண்டிருக்கும் இவ்வூர்வலத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்றேன். நிறைய வேற்றுமைகள் இருப்பதை அறிய முடிகிறது.

புலிகளின் ஊர்வலம் என்றால் புலித் தலையும், பிரபாகரனின் படமும் , புளொட் ஊர்வலம் என்றால் உமாமகேஸ்வரனின் படமும் முன்னால் போகும். புலிகளின் ஊர்வலத்தில் நிதிப் பொறுப்பாளர்கள் வீர உணர்ச்சி கொண்டு அதிரடிப்படை உடைகள் போட்டிருப்பார்கள்.

இந்த இயக்கங்களின் ஊர்வலங்களில் எழுப்பப்படும் கோஷங்களில் எதிரிகளை அம்பலப்படுத்துதல், எதிர்த்தல் என்பவற்றிற்குப் பதிலாக இயக்கத் தலைவர்மார்களுக்கு ஆலவட்டம் பிடித்தல் தான் இருக்கும். "Long live பிரபாகரன்" என்பதோ, "Long live உமாமகேஸ்வரன்" என்பதோ தான் பிரதான கோஷமாயிருக்கும். போதாததற்கு இந்திரா காந்தி காலத்தில் "Long live இந்திராகாந்தி" என்றும் கத்த வைத்தார்கள்.

இவ்வியக்கங்களின் ஊர்வலங்களில் தனியே புலியோ, புளொட்டோ தான் உக்கியோகபூர்வ

www.tamilarangam.net

மான ஒரே அமைப்பாக இருக்கும். வேறெந்த அமைப்பும் சுய அடையாளங்களுடன் இவர்களின் ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியாது. ஆனால் ஊர்வலத்திற்கு ஆள் பிடிக்கும்போது மட்டும் "இது பொதுவான ஊர்வலம். எல்லோரும் பங்கு பற்றலாம்" என்று வருந்தி அழைப்பார்கள்.

இவ்வியக்கங்களின் ஊர்வலம் மற்றவர்கள் கவனத்தை ஈர்க்கும் படியாக பெரும்பாலும் அமைவதில்லை என்றே சொல்லலாம். மௌன ஊர்வலத்திற்கும், ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கும் இடையிலுள்ள ஒரேயொரு வித்தியாசம் சத்தம் போடுவதுதான். ஊர்வலங்கள் பெரும்பாலும் ஜேர்மனியின் தலைநகரமான பொன்(Bonn)இல் தான் நடைபெறுவதுண்டு. பொன் நகர மக்களோ தினமும் ஒரு ஊர்வலத்தையேனும் பார்த்துச் சலித்துப் போயிருப்பவர்கள். இந்நிலையில் "எங்கள் தலைவர் பிரபாகரன்" என்றோ, "தோழர் உமா வாழ்க" என்றோ அட்டைகளைத் தூக்கிக் கொண்டு போனால் ஜேர்மனிய மக்களுக்கோ அல்லது அந்த இடத்திலுள்ள வெளிநாட்டு மக்களுக்கோ என்ன தான் புரியும்?. ஊர்வலங்கள் ஏன் என்பதைப் புரிந்துகொண்டு செய்வதைவிட்டுவிட்டு, ஊர்வலங்கள் வைத்தேயாக வேண்டும் என்பது தான் நோக்கம் என்பதையே இவை காட்டுகின்றன.

குர்திஸ்தானில் நடைபெறும் படுகொலைகளைக் கண்டித்து நட

"பாட்டும், படமும்"




கொடுத்ததெல்லாம் கொடுத்தான்!
அவன் யாருக்காகக் கொடுத்தான்...

www.tamilarangam.net

த்தப்படுகிற இந்த ஊர்வலத்தில் சில நல்ல அம்சங்களைக் காணக் கூடியதாகவிருந்தது.

கோஷங்களில்-

1. சர்வதேச ரீதியாக மக்களின் ஒற்றுமையை வலியுறுத்துதல்.

2. காலனித்துவத்தை எதிர்த்தல்.

3. பொது எதிரியை அம்பலப் படுத்துதல்.

4. அரசியல் தஞ்சம் கோரியிருந் தாலும் இந்நாட்டின் பாஸிஸத்தை அம்பலப்படுத்துதல்.

- போன்றன குறிப்பிடத் தக்கன. சர்வதேச ஒற்றுமை என் பதை வெறும் கோஷத்துடன் நிறு த்திவிடாது ஊர்வலத்தின் முன்ன ணிச் சுலோகத்தை ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு அகதியும், ஒரு ஜேர்மனியரும் தாங்கியிருந் தார்கள். அத்துடன் ஊர்வலத்தில் துருக்கிய மக்களும், ஆபிரிக்க, வியட்நாம் மக்களும், ஜேர்மனி யர்களும். விரல் விட்டு எண்ணக் கூடியளவு தமிழர்களும் பங்கெடுத் திருந்தார்கள்.

தெருவில் போபவர்கள் நின்று கவனிக்கக் கூடியதாக பறை ஒலி யை முழக்கியதையும், சிறுமிகளு க்கு துயரச் சூழலை விபரிப்பதாக உடையணிவித்து நடக்க வைத்த மையையும் குறிப்பிட்டுச் சொல் லலாம்.

ஊர்வலத்தின் முடிவில் குர்தி ஸ்தான் மக்களின் சுயநிர்ணய உரி மையை அங்கீகரிக்க வேண்டுமென் றும், குர்திஸ்தானில் மேற்கொள் ளப்படும் படுகொலைகள் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டும் என் றும் கோரப்பட்டது.

ஊர்வலத்தின்போது இடையி டையே குர்கிஸ்தான் மொழியிலும் கோஷமிட்டார்கள். அதன் அர்த் தம் எனக்கு விளங்கவில்லை. வீடு நோக்கிப் போகும்போது என்னு டன் வந்த குர்திஸ்தானிய நண்பரி டம் அர்த்தம் கேட்டேன். "பி.கே. கே. தலைவர் நீடுழி வாழ்க" என் றார் அந்த நண்பர். நல்ல அம்சங் கள் இருந்தபோதும் இந்த ஊர்வ லமும் இயக்கங்களுக்குரிய சில மரபுகளிலிரு ந்து தப்பவில்லை.

இந்த ஊர்வலத்தில் காணப் பட்ட நல்ல அம்சங்களை மட்டும் கொண்ட ஓர் ஊர்வலம் எங்கள் நாட்டில் மடிந்து கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்ற எப்போது தெருக்களில் போகும் என்ற கேள் வியுடன் பஸ் நிலையத்தை நோக்கி நடக்கின்றேன்.


- கந்தவனம்

oooooooooooooooooooooooooooooooooo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




02.04.1992 (வீ) 0000000000 பௌத்த மதம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 2.300 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு பொஸன் தினத்தன்று 2.300 சிறுவர்கள் இளம் பிக்குகளாகச் சேர்த்துக் கொள்ளப்படும்போது அவர்களிடையே 100 தமிழ்ச் சிறுவர்கள் இடம்பெறச் செய்யப்பட வேண்டுமென இலங்கை மக்கள் பிக்குமார் சங்கம் சனாதிபதியைக் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 5 பேருக்கு புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தம் இன அழிவை மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களுக்கு தாங்கமுடியாத பொருளாதாரப் பளுவையும் சுமத்தியுள்ளது. முழு நாட்டையும் கண்ணீர் சிந்தவைக்கும் இந்த யுத்தத்திற்கு முடிவு காணப்பட வேண்டும் - ஈழத் தொழிற் சங்க சம்மேளனம்.

03.04.1992 (வீ) 0000000000 கொழும்பில் கடந்த 2 தினங்களில் 25க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் வீதிகளிலும், பஸ்களிலும் வைத்துக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இடவசதி போதாத காரணத்தினால் தோட்டத்தில் தற்காலிகக் குடிசைகளை அமைத்துள்ள தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் வேலை வழங்க மறுத்துள்ளது. அத்துடன் 7 நாட்களுக்குள் தொழிலாளர்கள் அமைத்துள்ள தற்காலிகக் குடிசைகளை உடைத்து அப்புறப்படுத்த வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் பிரகடனங்களும், விதிமுறைகளும், சட்ட விதிகளும், அவற்றின் முழு உள்ளடக்கங்களும் உடனடியாகவே ஆங்கில, சிங்கள, தமிழ் செய்தித் தாள்களில் வெளிவருவதை அரசு உறுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்ய வேண்டுமென சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

07.04.1992 (வீ) 0000000000

'கறுப்புப் பூனைகள்' என்ற கொலைஞர் அணியை நடாத்தி வந்தவர்களும், ஐ.தே.க. வின் அரசியல்வாதிகளும் கறுப்புப்பூனைகளின் நடவடிக்கைகளுக்கு என்னை ஒரு வசதியான திரைமறைவாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். என் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஐ.தே.க. அரசியல்வாதிகளே பொறுப்பாளிகளாவார். நான் ஜே.வி.பி.யை கடுமையாகத் தாக்கி அதனை முடக்கினேன் என்பது உண்மை. ஆனால் 88இல் ஐ.தே.க. அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட கறுப்புப்பூனைகள் குழுவே எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் படுகொலைகளுக்கு எல்லாம் பிரதான காரணம். 89 இல் தேர்தல்களில் ஐ.தே.க. வெற்றி அடைவதற்கு இந்த கறுப்புப் பூனை பயங்கரவாதமே உதவியது - பொலிஸ் சேவையிலிருந்து கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டு இப்போது தலைமறைவாகியிருக்கும் முன்னாள் டி.ஜி.ஜி. உடுகம்பொல

08.04.1992 (வீ) 0000000000

ஐக்கியநாடுகள் சபை அமெரிக்காவின் கையாளாக மாறி வருகிறது. மூன்றாவது மண்டல நாடுகளை ஏமாற்றவும், வளர்முக நாடுகளை நசுக்கவும் அமெரிக்கா ஐ.நா. சபையைப் பயன்படுத்தி வருகிறது. ஐ.நா. சபை சுதந்திரமாக இயங்கும் ஒரு ஸ்தாபனம் இல்லை என்பதை நியாயமான முறையில் சிந்திக்கும் எவரும் உணர்வர் - அகில இலங்கை முஸ்லீம் லீக் ஐ.நா.வுக்கு அனுப்பிய கடிதத்திலிருந்து.

09.04.1992 (வீ) 000000000 0

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் கடந்த மாதப் பகுதியில் 1,672 பேர் விசர்நாய்க் கடிக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களுள் 10பேர் மரணமாகியுள்ளனர். இங்கு நிலவும் கடும் வரட்சியினால் ஆடு, மாடுகள் மடிகின்றன. நாய்கள் விசர் பிடித்துத் திரிகின்றன.

11.04.1992 (வீ) 0000000000

அம்பாறை பஸ் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 25 பிரயாணிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியா குருமன்காட்டில் 24 வீடுகள் இராணுவத்தினரால் புல்டோசர் மூலம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

12.04.1992 (வீ) 000000000 0

கொழும்பு காலி வீதியிலுள்ள

www.tamilarangam.net

அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் முஸ்லீம் குழுவொன்று ஆர்பாட்டம் நடாத்தியது. அமெரிக்கா ஒழிக, லிபியா மீது கைவையாதே, ஐ.நா. பாதுகாப்புச் சபையா? அமெரிக்கப் பாதுகாப்புச் சபையா? என்பன போன்ற சுலோகங்கள் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

16.04.1992 (வீ) 0000000000
புலிகள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியாது. வடக்கு-கிழக்கில் அரச படைகளுக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதலைத் தற்காலிகமாக நிறுத்தி யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் முக்கிய கவனம் செலுத்துவோம் - யாழ் செல்லவுள்ள பிக்குமார்.

மண்டூரில் புலிகளுக்கும் ரெலோவுக்கும் இடையிலான மோதலில் 7 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

18.04.1992 (வீ) 0000000000
தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடான ஆலோசனையை அரசு முன்வைக்குமானால் அது குறித்து சர்வதேச மத்தியஸ்துடலான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும், கண்காணிப்புடன் கூடிய போர் நிறுத்தம் மேற்கொள்ளவும் புலிகள் இயக்கம் தயாராக உள்ளது - பாலசிங்கம்

எல்வட்டன் தோட்டத்திற்குள் புகுந்த இனந்தெரியாக கோஷ்டியொன்று தொழிலாளர்களைத் தாக்கியுள்ளது. இதன் பின்னணியில் தோட்ட உத்தியோகஸ்தர்களே இருந்துள்ளனர்.

20.04.1992 (வீ) 0000000000
பெரும்பான்மைச் சிங்களவர்கள் மூத்த சகோதரர்கள். சிறுபான்மை இனத்தவர்கள் தம்பிமார். ஒரு தம்பி குழப்பம் விளைவித்தால் அண்ணன் அவனை அயல் வீட்டாரிடம் ஒப்படைக்க மாட்டான். தானே திருத்த முயல்வான் - பிரேமதாசா

வடக்கில் அச்சம், துன்பம், உதவியற்ற நிலை, ஏக்கம் போன்ற உணர்வுகளுக்குச் சிறியவர்களும், முதியவர்களும் பெரிதும் ஆளாகி உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். விரக்தி மற்றும் எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்ததன் மூலம் அதிகப்படியான தற்கொலை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன

21.04.1992 (வீ) 0000000000
ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லீம்கள், தமிழர்கள் மற்றும் சிங்களவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுவிப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச அமைப்புகளிடம் அகதிகள் நிவாரண அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. புலிகள் மட்டுமன்றி ஏனைய ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களும் பலரைக் காவலில் வைத்துள்ளன.

திருச்சி முகாம்களில் சுகாதாரச் சீர்கேட்டினால் கடந்த 4 மாதங்களில் 15 தமிழ் அகதிகள் இறந்துள்ளனர். முகாமுக்கு சுகாதார அதிகாரிகள் யாரும் வருவதேயில்லை. திருச்சி மாவட்டத்தில் 9 முகாம்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகத் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

22.04.1992 (வீ) 000000000
கல்குடா இராணுவ முகாமைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் பாதுகாப்புக் காரணமாக தத்தமது வீடுகளை விட்டு வேறிடங்களுக்குச் சென்றுள்ளதால் இவர்களின் வீடுகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

23.04.1992 (வீ) 000000000 0
30,000க்கும் மேற்பட்ட இலங்கைக் கண்கள் 136 நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

25.04.1992 (வீ) 000000000 0
100 வருடங்களுக்கும் மேலாக பரம்பரையாக மாபேரி தென்னை விக்ரோரியாப் பிரிவில் தொழில் புரிந்தும், வாழ்ந்தும் வரும் குடும்பங்கள் உட்பட சுமார் 1,200 பேரை இத் தோட்டத்திலிருந்து வெளியேற்றும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்த இடத்தில் சர்வதேச கொல்ஃப் விளையாட்டுத் திடல் ஒன்று அமைக்கவும். உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றை நிறுவுவதற்கும் வெளிநாட்டு நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. கொல்ஃப் விளையாட்டுத் திடலுக்கும், உல்லாச ஹோட்டலுக்கும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக தொழிலாளர்கள் தங்கள் இரத்தத்தாலும், வியர்வையாலும் உருவாக்கிய மிளகு, கோப்பி, கொக்கோ, தென்னை போன்ற பயிர்களை நாசமாக்குவதா என்ற குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

28.04.1992 0000000000000
அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும், தொழிலாளர்களின் சனனாயக உரிமைகளை வழங்குமாறும் கோரி சி.எம்.யு., ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் ஆகிய தொழிற்சங்கங்கள் மறியல் போராட்டம் நடத்தின.
கடந்த 3 வருட காலத்தில் 9 ஆயிரம் வரையான இலங்

www.tamilarangam.net

கைச் சிறுவர்கள் வெளிநாட்டவருக்கு விற்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அகதி முகாம்களிலுள்ள அகதிகள் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் வேறு ஆட்சிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டால் மாத்தறையும், அம்பாந்தோட்டையுமே ருஹுணுவுக்கு மிஞ்சும். ருஹுணுப் பகுதிக் கலாச்சாரம் நிலைத்து நிற்பது சிங்கள-பௌத்த கலாச்சார பண்புகளாலாகும். அன்று ருஹுணுப் பகுதியுடன் சேர்ந்திருந்த வடக்கு-கிழக்கை மீண்டும் அதனுடன் சேர்த்துக் கொள்வதால் மாத்திரமே இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும் - முன்னாள் கல்விப் பணிப்பாளரும், பரீட்சை ஆணையாளருமான குணபால.

இன்று ஈழம் கோருவோர் தமது பாரம்பரிய பகுதியென கூறும் பிரதேசங்கள் எல்லாம் அன்று ருஹுணுவுடன் சேர்ந்திருந்தன. யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு கல்வெட்டுத் தமிழ்த் தூண்களையும் காணமுடியாது - ருஹுணு பல்கலைக்கழகப் பேராசிரியர் சிறிமல்.

30.04.1992 00000000000000

பொலநறுவ மாவட்டத்தில் அழிஞ்சிபத்தன எனும் முஸ்லிம் கிராமம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி 54 முஸ்லிம்களைக் கொன்றுள்ளனர். சுட்டுக் கொன்றபின் சடலங்களின் தலைகளைத் துண்டித்து காட்டுக்குள் எறிந்த புலிகள் முண்டங்களையும், கிராமத்தின் வீடுகளையும் எரித்துள்ளனர். கொல்லப்பட்டோரில் 14 பேர் ஆண்கள், 17 பேர் பெண்கள். 16 பேர் சிறுமிகள், ஏனையோர் பச்சிளம் குழந்தைகள். மொத்தம் 26 வீடுகள் எரிக்கப்பட்டு, 12 வீடுகள் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இன்று ஒரு சில குழுவினர் பிரச்சினைகளை அதிகரிக்க முயல்கின்றனர். இது உலக நியதி. அவர்கள் கேட்பது கொடுக்க முடியாதவற்றையாகும் - பிரேமதாச.

அழிஞ்சிபத்தன முஸ்லீம் கிராமம் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக அக் கிராமத்திற்கு அருகிலுள்ள 2 தமிழ்க் கிராமங்கள் முஸ்லீம் ஊர்க் காவற் படையால் தாக்கப்பட்டு 20 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

# சமூக முன்னோட்டமும், முற்போக்காளர்களும்

(கலம் 50இன் தொடர்ச்சி)

## வெளிநாடுகளில் வாழும் இலக்கிய கர்த்தாக்கள்:

இவர்களின் தன்மைகள் விளங்கிக்கொள்ள முடியாததல்ல. ஒடுகிற வெள்ளத்தில் முன்னுக்கு நின்று தம்மைப் பிரபலப்படுத்துபவர்கள் அந்த வெள்ளம் அடங்கியவுடன் ஒரு கரையில் ஒதுக்கப் படுபவர். இவர்களை விட்டுவிட்டுப் பார்த்தால் –

1). பழைய இருப்பை மட்டும் வைத்து இலக்கியம் படைப்பது.
2). புலி எதிர்ப்பை மட்டும் வெளிப்படுத்துவது.
3). பொதுவாக எல்லா விசயங்களையும் விமர்சிப்பதுடன் நின்று விடுவது.
4). பொதுவாக எல்லா விசயங்களையும் விமர்சிப்பதுடன் புதிய மார்க்கம் ஒன்றை தேடுவதில் தம்மையும் இணைத்துக கொள்வது.

இவற்றில் நான்காவது வகுப்பினரே இன்றைய தேவையை உணர்ந்தவர்கள். இவர்களை மேல் மூன்று பகுதியினரும் ஏற்றுக்கொள்வதில்லை. மேல் மூன்று பகுதியினருமே இன்று எழுத்தாளர்கள் என்ற அந்தஸ்து பெற்றவர்களாக இருப்பது இன்றைய துரதிஷ்டம். இருப்பினும் நாலாவது பகுதியினரின் உண்மைகள் மூன்று பகுதியினரையும் சற்றுச் சிந்திக்க வைக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. முதலாவது,

www.tamilarangam.net

இரண்டாவது பகுதியினர் ஆமை வேகப் போக்குடையவர்கள். இவர்கள் ஒரு விசயத்தை விளங்கிக் கொள்ளும்போது அந்த விசயம் நடந்துமுடிந்து பல வருடங்கள் சென்றுவிடும். ஆனால் பழைய இருப்பைக் கொண்டவர்கள் நவீன பந்தங்களும், திரட்டுகளும் வெளியிடுவர். இதன் மூலம் அந்தப் பழைய இயங்கியலற்றவர்களுக்கு தீனி போடுவதுமே இவர்களின் பங்களிப்பாக இருக்க முடியும்.

இன்று ஒரு புதிய பாதை பற்றியும், அதற்கான ஆய்வுகள் பற்றியும் செய்ய வேண்டிய வேலையை உணர்ந்து அதன் வழியில் செல்லும் சஞ்சிகைகள் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. இந்தச் சஞ்சிகைகளில் தமிழ் இயக்கங்களின் தவறுகள், அராஜகப் போக்குகள், மனித உரிமை மீறல்... இவை பற்றித் தனது கருத்தையும் , ஏனையோரின் கருத்துகளையும் வெளியிட்டு காலத்தின் தேவையை உணர்ந்து வெளிவரும் தூண்டிலும் ஒன்று. இந்தச் சஞ்சிகைகள் தங்கள் வேலைமுறைகளை வாசகர்களை இனங்கண்டு முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையின் சமுக,விஞ்ஞானப் போக்கானது சூரியமல்லி இயக்க காலத்தில் 'மலேரியா நோய்'க்கு எதிராக, சமுகத்தின் பல வர்க்கத்தட்டுக்களின் நல்லெண்ணம் கொண்டவர்களை இணைத்து வேலை செய்தது போல், இன்றும் தமிழ்த் தேசியத் தலைமையை பிரதிபலிக்கும் புலிகளின் நடவடிக்கைகளினால், மரணபயத்தால் மௌனிகளாக்கப்பட்டுள்ள மக்களையும், முற்போக்கு எண்ணங்கொண்ட நேர்மையான சக்திகளையும் ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள சக்திகளிற்கு தீப்பொறி, N.L.F.T., P.L.F.T., பேரவை போன்றவர்களின் அழிப்பு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

'தேசிய சக்தி' என்று அறிக்கைவிட்டு புலிகளை ஆதரித்தாலும், மார்க்ஸிய கருத்துடையவர்கள் தமிழ்த் தேசியத் தலைமையின் எதிரிகளே என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. இந்த உண்மைகளை விளங்கிக்கொண்டு, இன்று மேலைநாடுகளில் வாழ்கின்ற நேர்மையான சமுக, விஞ்ஞானப் போக்குடையவர்களை முதல் வேலையாக அணிதிரட்ட வேண்டும். இந் நடவடிக்கை மிகவும் கடினமானது. இதைத் தனித்தொரு பத்திரிகை செய்ய முடியாது. எனவே வெளிநாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளில் ஒருமைப்பாட்டுக்குள் வரக்கூடியவை ஒன்றுகூடி பொது வேலைமுறை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

– சாந்தன்

www.tamilarangam.net




# கல்யாணம் செய்யாததால் நாடு கடத்தல்

பாடசாலையில் பாடங்கள் நடந்துகொண்டிருந்தன. திடீரென ஒரு வகுப்புக்குள் பொலிஸ்காரர்கள் நுழைந்தார்கள். அங்கு டொச் மாணவர்களுடன் படித்துக் கொண்டிருந்த குர்திஷ் மாணவரைத் தங்களுடன் வரும்படி கூட்டிச் சென்றார்கள். தான் கொண்டு செல்லப் படுவதற்கான காரணம் தெரியாமலும், தன்னுடைய சக வகுப்பு மாணவர்கள் இதை வேடிக்கை பார்ப்பதாலும் அந்த குர்திஷ் மாணவர் கூசிக் குறுகிப் போனார்.

அதே பாடசாலையில் வேறு வகுப்பில் படித்துக்கொண்டிருந்த இம் மாணவரின் சகோதரரும் இதேபோல் பொலிஸாரினால் கூட்டிவரப்பட்டார்.

பொலிஸ் வானில் அவர்கள் இருவரும் கொண்டுசெல்லப்படும் போதும் அவர்களைக் கொண்டு செல்வதற்கான காரணத்தைப் பொலிஸ் தெரிவிக்கவில்லை.

பொலிஸ்வான் சகோதரர்கள் வசிக்கும் முகாமுக்கு முன் நிறுத்தப்பட்டது. அவர்கள் இருவரும் பொலிஸாரினால் முகாமுக்குள் கூட்டிச் செல்லப்பட்டார்கள்.

தனது பிள்ளைகளை பொலிஸ் காரருடன் கண்ட தாய் பதறிப் போனாள். அவர்கள் எல்லோரையும் உள்ளே வைத்துக் கதவைப் பூட்டிய பொலிஸ், அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் நாடுகடத்தப்படுவதாகவும், தாங்கள் உடைமைகளை எடுத்துக்

www.tamilarangam.net

கொண்டு தயாராக அரை மணித்தியால அவகாசம் தரப்படுவதாகவும் கூறியது.

எவ்வித முன்னறிவித்தலுமின்றி திடீரென இப்படித் தெரிவித்ததும் தாயும், பிள்ளைகளும் அதிர்ச்சியடைந்துவிட்டார்கள். அழுது குளறினார்கள். கெஞ்சினார்கள். பொலிஸ் எதற்கும் மசியவில்லை.

தங்களுக்குத் தெரிந்தவர்களுடனோ, சட்டத்தரணியுடனோ, அகதி உதவி நிறுவனங்களுடனோ தொடர்புகொள்ள அம் முகாமில் தொலைபேசி இணைப்பு இல்லை. அவர்கள் வெளியே போக பொலிஸ் அனுமதிக்கவில்லை.

அரை மணித்தியாலத்தின் பின் அக் குடும்பம் கதறக் கதறப் பலவந்தமாக விமானநிலையம் கொண்டுசெல்லப்பட்டு, குர்திஷ் மக்களைச் சித்திரவதை செய்து கொன்று குவிக்கும் துருக்கி நாட்டுக்கு நாடுகடத்தப்பட்டது.

இச் சம்பவம் பெப்ரவரி மாதம் ஜேர்மனியின் வடமாநிலத்தில் நடந்தது.

அதே மாதம் கம்பேர்க் மாநிலத்தில் ஒரு சம்வம். இலங்கையைச் சேர்ந்த ஒரு தாயும், இரண்டு பிள்ளைகளும் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார்கள். கணவன் மட்டும் தொடர்ந்து ஜேர்மனியில் இருக்க அனுமதிக்கப்பட்டார்.

இத் தாயும், பிள்ளைகளும் நாடுகடத்தப்பட்டமைக்கான காரணம் தாய் தனது கணவனைத் திருமணம் செய்யவில்லை என்பதாகும்!!

இப் பெண் பதிவுசெய்யாமல் கணவருடன் சேர்ந்திருந்தார். ஜேர்மனியச் சட்ட விதிகளின்படி பதிவுத் திருமணம் செய்பவர்கள் தங்களுக்கு முன்னர் திருமணமாகவில்லை என உறுதிப்படுத்தும் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். இச் சட்டம் இங்கு வாழும் வெளிநாட்டவர்களுக்குமானது.

குழந்தைகள் பெற்ற பின்பும் கூட இக் குடும்பத்தால் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்ய முடியவில்லை. காரணம் கணவனால் இலங்கையிலிருந்து குறிப்பிட்ட உறுதிப் பத்திரத்தை எடுத்துச் சமர்ப்பிக்க முடியவில்லை.

அப் பெண்ணுக்கோ அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. காரணம் அவர் தென்னிலங்கையிலிருந்து வந்தவர் என்பது. இதே காரணத்தினால் அவர் திரும்பிச் செல்லாம் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. அப் பெண் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்தால் மட்டுமே ஜேர்மனியில் தொடர்ந்து தங்கமுடியும். ஆனால் திருமணப்

www.tamilarangam.net

பதிவு அலுவலகமோ குறிப்பிட்ட உறுதிப் பத்திரம் இல்லாமல் திருமணத்தைப் பதிவுசெய்ய மறுத்துவிட்டது. இவ் விவகாரம் பின்னர் நீதிமன்றத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. இலங்கையில் தற்போது நிலவும் யுத்த நிலைமைகளினால் பத்திரங்களை அங்கிருந்து எடுப்பிப்பது மிகவும் கடினமானது என மத்திய குடிமக்கள் பதிவுத் திணைக்களம் விளக்கம் கொடுத்தும்கூட, குறிப்பிட்ட உறுதிப் பத்திரம் இல்லாமல் திருமணத்தைப் பதிவுசெய்யமுடியாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டது.

இதன்பின் விசாவைப் புதுப்பிக்க வரும்படி அழைக்கப்பட்ட அத்தாயும், பிள்ளைகளும் வெளிநாட்டவர் அலுவலகத்தில் வைத்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, விமானநிலையம் கொண்டுசெல்லப்பட்டு நாடுகடத்தப்பட்டார்கள்.

சென்ற மாதம் நடைபெற்ற இந்த இரண்டு சம்பவங்களும் ஜேர்மனிய அரசு அகதிகளின் கழுத்தை நெரிக்க ஆரம்பித்திருப்பதை துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. ஏற்கெனவே பல கடுமையான சட்டங்களை அகதிகளுக்கென உருவாக்கியிருக்கும் ஜேர்மனிய அரசு மேலும் நெருக்கடிகள் கொடுப்பது பற்றி முடிவெடுக்க பல கட்சிப் பேச்சுவார்த்தைகளை மறுபடியும் இவ் வருடத்தில் ஆரம்பித்துள்ளது.

ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட பல கொடூரச் சட்டங்கள் இவ்வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து ஜேர்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனி முழுவதிலும் நடைமுறைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான பல தயாரிப்பு வேலைகள் பல மாநிலங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

நடைமுறைக்கு வரும் சட்டங்களில் சில:

1. புதிதாக வரும் அகதிகள் விமானநிலையத்திலோ அல்லது எல்லைகளிலோதான் அரசியல் தஞ்சம் கோரமுடியும். அவ்விடத்திலேயே தஞ்சவிண்ணப்பம் திருப்தியளிக்கப்படாத பட்சத்தில் அவ்வகதி நாடு கடத்தப்படுவார்.

2. தஞ்சம் கோரும் அகதியொருவர் அரசியல் தஞ்சம் வழங்கும் வேறொரு நாட்டினூடாக வந்திருந்தால் அந் நாட்டுக்கே திருப்பியனுப்பப்படுவார். ( அதாவது ஒரு அகதி பிரயாணம் செய்யும் விமானம் பிரான்ஸில் தரித்து பின்னரே ஜேர்மனிக்கு வந்திருந்தால் அந்த அகதி பிரான்ஸிற்கே திருப்பியனுப்பப்படுவார். )

3. பாரிய கட்டிடங்கள், கைவிடப்பட்ட பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், பழைய இராணுவ முகாம்கள் ஆகியவற்றில் அனைத்து நாட்டு அகதிகளையும் ஒன்றாகக் குவிப்பது. இம் முகாம்கள் Sammellager என்றழைக்கப்படுகின்றன.

4. இம் முகாம்களைவிட்டு அகதிகள் எக் காரணம் கொண்டும் வெளியேறமுடியாது. அகதிகள் வெளியேறுவதைத் தடுக்க முகாமைச் சுற்றிப் பலத்த காவல் போடப்படும். அகதிகளுக்கு உணவுப் பொருட்கள் வாராவாரம் கொடுக்கப்படும். இந்தப் பொருட்களை அகதிகள் சமைத்து உண்ணவேண்டும். அகதிகள் நோய்வாய்ப்பட்டால் மருத்துவரும் முகாமுக்கே கொண்டு வரப்படுவார்.

5. அகதி உதவி நிறுவனங்களோ, ஜேர்மனிய நண்பர்களோ, சட்டத்தரணிகளோ எவருமே இந்த முகாம்களுக்குள் புகமுடியாது.


6. முகாமுக்குள்ளிருக்கும் அகதிகள் தங்கள் அரசியல் தஞ்சம் /தேவைகள் தொடர்பாக சட்டத்தரணிகளுடனோ, அகதி உதவி நிறுவனங்களுடனோ, தங்களது தனிப்பட்ட ஜேர்மனிய நண்பர்களுடனோ தொடர்புகொள்ள முடியாது. இவர்களது அரசியல் தஞ்ச விவகாரங்களை கவனித்துக்கொள்ள அரச சட்டத்தரணியே நியமிக்கப்படுவார்!

7. ஒவ்வொரு அகதியினதும் அரசியல் தஞ்ச விண்ணப்பம் 6 வார காலத்திற்குள் விசாரணைக்கெடுக்கப்படும். தீர்ப்பில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட அகதிகள் அவர்களின் தாய்நாட்டுக்கு நாடு கடத்தப்படுவார்கள். தஞ்சம் நிரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கரிக்கப்பட்ட அகதிகள் இத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியாது.

இத்தகைய புதிய சட்டங்கள் காட்டுவது என்னவெனில், அகதிகள் ஜேர்மனிக்குள் இனி உள்வர முடியாதென்பதையும், அப்படித் தப்பித் தவறி வந்தாலும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்படுவார்கள் என்பதையுமே.

அனைத்து அகதிகளையும் ஒன்றாகக் குவித்து அடைத்து வைக்கும் முகாம்கள் ஆங்காங்கே பல மாநிலங்களில் இயங்க ஆரம்பித்து விட்டன. பாடன்வூற்றன்பேர்க் மாநிலத்தில் பிரான்ஸ் இராணுவம் விட்டுச் சென்ற முகாமும், நோர்த்றைன் வெஸ்ற்பாலின் மாநிலத்தில் பழையகால சிறைச்சாலையும் அகதிகள் முகாமாக்கப்பட்டு, அகதிகள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத்துடன் அரசின் துவேஷம் முடிந்துவிட்டதா? இல்லை! திட்டமிட்டவகையில் வெவ்வேறு இனத்தவர், மதத்தவர், நாட்டவர்களிடையே பிளவையும், பகையையும் உண்டாக்கும் விதத்தில் முஸ்லீம் அகதிகள் இருக்கும் அறையிலே கிறிஸ்தவ அகதிகளையும், யூகோஸ்லாவியா அகதிகளுடன், லெய்ரா அகதிகளையும், லெபனான் குடும்பங்களுடன், ஈழத்து இந்துக்களையும்.... என்று ஒன்றாகக் கலந்து பலவந்தமாகத் தங்கவைத்துள்ளார்கள். மொழி புரியாத நிலையிலும், தனிமைப்படுத்தப்பட்ட உளவியலாலும், முகாமுக்கேயுரிய மோசமான

www.tamilarangam.net

தன்மைகளாலும், வேற்று நாட்ட வரைப் பற்றிய எந்த விளக்கங்களும் இல்லாததாலும் அல்லது தவறான கணிப்புகளை வைத்திருப்பதாலும் அகதிகளுக்கிடையே மோதல்கள் வெடிக்கின்றன. ஆயுதங்கள் கொண்டு தாக்குமளவிற்குக்கூட இவை பயங்கரமடைகின்றன. ஒடுக்கப்படுபவர்கள் என்ற ரீதியில் ஒன்றாகச் சேர்ந்து, பலமாக தங்களை வலுப்படுத்திக்கொள்ள வேண்டிய அகதிகள் தங்களுக்குள்ளேயே பகைவர்களாகிச் சிதறியிருப்பதுதானே ஒடுக்குகின்ற அரசிற்குத் தேவையானது!

நூறு, இருநூறு அல்லது அதற்கும் மேற்பட்ட அகதிகளுக்கு ஒரு மல-சலகூடம், ஒரு குளியலறை, ஒரு சமையலறை என்பனவே கொடுக்கப்பட்டிருப்பதால் இவற்றைப் பாவிப்பதிலும் மோதல்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் பொறுப்பை யார் எடுத்துக்கொள்வது என்பதால் சுகாதாரமின்மை நிலவி, அதனால் தோல் நோய்கள், தொற்றுநோய்கள் பரவுகின்றன.

இவை அத்தனையிலும் இம் முகாம்களுக்குள் அடைபட்டுக்கிடக்கும் குழந்தைகளே அனைவரிலும் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள். சிறைக் கைதிகள் (போன்ற) முகாம் வாழ்க்கை குழந்தைகளை உளவியல் ரீதியாகப் பலமாகத் தாக்குகின்றது.

இப்படிப்பட்ட முகாம்கள் பெரும்பாலும் நகரிலிருந்து ஒதுக்குப்புறமாகவே அமைந்துள்ளன. நகருக்குள் இதுகாலவரை வசித்து வந்த அகதிகளும் பலவந்தமாக இத்தகைய முகாம்களுக்கே இடம்மாற்றப்படுகிறார்கள். இம் முகாம்கள் அரசுக்கு மட்டுமல்ல, புதிய நாஸிகளுக்கும், வெளிநாட்டவர் எதிர்ப்பாளர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன என்றால் மிகையில்லை.

சென்ற வருடம் செப்ரெம்பர் மாதத்திலிருந்து தீவைப்பு, கொலை, அடித்துத் துன்புறுத்தல் என்று தீவிரமடைந்துகொண்டிருக்கும் அகதிகளுக்கெதிரான வன்முறைகள் இன்று வரை சற்றேனும் குறையவில்லை. எனினும் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி என்பன திட்டமிட்டு அகதிகளுக்கெதிரான தாக்குதல்களை இருட்டடிப்புச் செய்துவருகின்றன. இதனால் செய்திகள் வெளியில் வரமுடியாததுடன், தாக்குதல்கள் குறைந்துவிட்டன என்று அகதிகளும் எச்சரிக்கையின்மையாக இருக்கவே வாய்ப்பேற்பட்டுள்ளது.

எனினும் நேரில் கண்டவர்கள் மூலமாகவும், பாஸிஸ எதிர்ப்புக் குழுக்களின் பிரசுரங்கள், பிரச்சாரங்கள் மூலமாகவும் அகதிகளுக்கெதிரான வன்செயல்கள் ஆகக் குறைந்தது தினம் ஒன்றேனும் இட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம்பெறுவதை அறியமுடிகிறது.

சென்ற மாதக் கடைசியில் றாவன்ஸ்பேர்க் என்ற நகரத்தில் ஒரே இரவில் 4 வெவ்வேறிடங்களிலமைந்த அகதி முகாம்களுக்குத் தீ வைக்கப்பட்டது. இத் தீவைப்பை கிழக்கு ஜேர்மனியிலிருந்து வந்த புதியநாஸிக்குழுவே செய்திருப்பதாக பாஸிஸ எதிர்ப்புக் குழு தெரிவித்துள்ளது. இதை மறுத்த பொலிஸ் 4 முகாம்களும் எரிந்தமைக்கு விபத்தே காரணம் எனக் கூறியுள்ளது!

சென்ற மாதம் நூறன்பேர்க்கிற்கு அருகிலுள்ள சிறிய நகரமொன்றின் மிகவும் பாழடைந்த கட்டிடமொன்றிலமைந்த அகதிகள் முகாமுக்குத் தீவைக்கப்பட்டது. இதனால் மூச்சுத் திணறி மோசமான நிலையில் 14 குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். இம் முகாம் தீப்பற்றியதற்கு மின்சார ஒழுக்கே காரணம் என பொலிஸ் தெரிவித்துள்ளது! எனினும் இம் முகாம் தீப்பிடிப்பதற்கு முன் லொறிகள் ஓடித் திரிந்த சத்தம் கேட்டதாகவும், தீப்பிடித்து எரிந்த கட்டிடத்தைச் சுற்றி கருகிய ரயர் கம்பிகள் பல இருந்ததாகவும் அயலவர்கள் கூறுகின்றனர்.

லம்பேர்த்ஹைம் என்ற நகரில் முகாம் எரிக்கப்பட்டதில் இலங்கையைச் சேர்ந்த முபக் (13 மாதக் குழந்தை), நிலீமா (4 மாதக் கர்ப்பிணிப்பெண்), மொகிதீன் ஆகியோர் எரிந்து சாம்பலானார்கள். தாம் தப்பிவந்து, உள்ளே எரிந்து






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கும் - உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இலங்கைக் குடும்பத்தைக் காப்பாற்று மாறு கதறியதாகவும், நெருப்பு எரிவதால் தாம் ஒன்றும் செய்ய முடியாதென்று கூறி பொலிஸ் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாகவும் உயிர் தப்பிய ஏனைய நாட்டு அகதிகள் கூறியுள்ளார்கள்.

இப்படியாக அகதிமுகாம்களுக்கு தீவைத்தல் தொடரும் நிலையில் - இவை யாவும் விபத்துகளே என்று பொலிஸ் காரணம் கூறிக் கொண்டிருக்கையில் - Smmellager எனப்படும் முகாம்களில் அனைத்து நாட்டு அகதிகளும் ஒன்றாகக் குவிக்கப்பட்டுக்கொண்டிருப்பது நிறவெறியர்களுக்கு இலகுவானது தீவைப்பதற்கும், உள்ளே புகுந்து தாக்குவதற்கும்.

இப்படியான முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள அகதிகள் ஹிட்லர் காலத்தில் நடந்த சம்பவங்களை நினைவில் கொண்டுவந்து அஞ்சுகிறார்கள். கைதிகளை அடைத்து வைத்திருந்த முகாமில் தண்ணீரை நிறுத்தி, பின்னர் தண்ணீர் வருவதாகக் கூறி குழாய்களில் நீருக்குப் பதிலாக விஷவாயுவைச் செலுத்தி முகாமிலிருந்த அத்தனைபேரையும் கொன்றமை போன்ற ஹிட்லரின் வெறித்தனங்கள் இவை பற்றிக் கேள்விப்பட்ட அகதிகளைப் பீதிக்குள்ளாக்கியுள்ளன.

இந் நிலையில் இங்கே இப்போதிருக்கின்ற அகதிகளும், தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கின்ற அகதிகளும் என்ன செய்யப் போகிறார்கள்? இன்று ஜேர்மனியில் நடைபெறுவது அடுத்த வருடம் இணைந்த ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் நடைபெறலாம்.

இன்றைய நிலையில் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவதோ, தாமாக விரும்பிச் செல்வதோ பெரும்பாலானவர்களுக்கு உயிராபத்தான விடயமே. இந்தியாவிலிருந்து பலாத்காரமாக விரட்டப்பட்ட தமிழ் அகதிகளில் பலர் திருகோணமலையில் இறங்கிய சில நாட்களுக்குள்ளேயே "காணாமற்" போய் விட்டது கவனத்தற்கொள்ள வேண்டிய விடயம்.

அப்படியானால் இங்கும் வாழ முடியாது, அங்கும் வாழமுடியாது என்ற நிலைமையில் எத்தனை காலந்தான் வாழ்வது? இங்கேயே முகாம்களுக்குள் வைத்து தீயிலிடப்படும்வரை பார்த்துக்கொண்டிருப்பதா? இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டு அங்கு காணாமற்போகும் வரை பார்த்துக்கொண்டிருப்பதா?


இன்று உலகில் எந்தப் பாகத்திலுமே மனிதர் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும், வாழ்வதற்கு இடமில்லை. பிரச்சினைகளும்,ஆபத்துகளும் அதிகரித்துக் கொண்டிருக்

www.tamilarangam.net

கின்றனவே தவிர, குறைவதற்கான எந்த அறிகுறிகளுமே இல்லை. ஆகவே இதுவரையிலும் எந்த ஆபத்திலும் மாட்டிக் கொள்ளாமல் தப்பிக்கொண்டிருப்பவர்கள் நாளையோ, அடுத்தநாளோ அவற்றுள் அகப்படலாம்.

இதிலிருந்து மீள என்ன செய்யலாம்? தீர்வு எங்கள் கைகளில் தான் இருக்கிறது. அரசியல் என்பது ஆபத்தான விடயம், சோலி சுரட்டு வேண்டாம், ஒதுங்கியிருப்போம், ஒன்றும் சரிவராது, நாங்கள் ஏன் தலையிடுவான், ஆரேனும் ஏதாவது செய்வார்கள்தானே, நடக்கிறது நடக்கட்டும்... இப்படியான மனோநிலையில்தான் எங்களில் பலர் எதிலும் சம்பந்தப்படாமல் (என்று நினைத்துக்கொண்டு) இருக்கிறோம். எங்களை ஒடுக்குபவர்கள் தங்களுக்குக் கஷ்டம் வரும் போதெல்லாம் ஒன்றுபட்டு தங்களைப் பலப்படுத்திக்கொண்டு எங்களைக் கூட்டாகவே ஒடுக்குகிறார்கள். சுரண்டுவதைப் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். எதிர்த்தால் கூட்டாகச் சேர்ந்துகொண்டு கொல்லுகிறார்கள். வளைகுடா யுத்தம், காஷ்மீரில் இந்திய, பாகிஸ்தான் அரசுகளின் அடாவடி, குர்திஷ் மக்களை துருக்கி, ஈராக், ஈரான் அரசுகள் அழிப்பது.... போன்ற நிகழ்வுகள் இதைத்தான் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலைமையில் ஒடுக்குபவர்களைவிட எண்ணிக்கையிலும், நியாயத்தின் அடிப்படையிலும் பலமாக இருக்கும் நாங்கள் அழிக்கப்படுவதற்கு எங்களின் தற்போதைய மனோநிலைகளும், வாழ்நிலைகளும்கூட காரணமாயிருக்கின்றன என்பதை எப்போது அறிந்துகொள்ளப் போகிறோம்?

– பாரதி






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாக்குமூலம் !

" தூண்டில் புலிப் பத்திரிகையாகி விட்டது "

" தேசத்தின் குறிப்புப் பற்றி கடலோடிகள் மௌனம் "

" ஈழப் பிரச்சினை தொடர்பாக மற்றவர்களுடைய கருத்தை எதிர் பார்க்கும் கடலோடிகள் தங்கள் கருத்தை முன்வைக்கவில்லை "

" கடலோடிகளுக்கு என்று ஒரு நிலைப்பாடு இல்லை "

இப்படியும், இன்னும் பலவு மாக ஏராளமான விமர்சனங்கள் கடிதங்கள் மூலமாகவும், நேரி லும் எங்கள் மீது வைக்கப்பட்டுள் ளன. கடந்த காலங்களில் இயக் கங்களின் அறிக்கைகளை நம்பி மோசம் போனது போல இனியும் ஏமாற்றப்பட்டுவிடக் கூடாது என் பதில் காட்டப்படும் எச்சரிக்கை அவசியமானது. தூண்டில் தலை யங்கங்கள் மூலமாக எங்கள் கரு த்து(!) அறியப்படாமல் போய்விட் டதால் கேள்வி-பதில் வடிவில் தருகிறோம்.

*கடலோடிகளுக்கும் புலிகள் தேசிய சக்திகள்தானா?*

பாஸிஸத்தன்மை, மனித உரிமை மீறல்கள், ஜனனாயக பறிப்புகள், மக்கள் விரோதச் செயற்பாடுகள், இலங்கை-இந் திய அரசுகளுடனான கள்ளத் தொடர்புகள், மொஸாட் பயிற்சி, கொலம்பியா போதை வஸ்துக்

www.tamilarangam.net

கடத்தல்.... போன்ற புலிகளின் செயற்பாடுகளைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறோம்.

இவற்றைவிட புலிகள் பற்றிய எமது பார்வை 2 விடயங்களை உள்ளடக்கியது. இவையே இன்று "பிரச்சினைக்குரியனவாக" இருக்கின்றன.

ஒன்று, புலிகளை அழிப்பதற்கு இலங்கை, இந்திய அரசுகளுக்கோ, இவற்றுடன் கூட்டுச் சேர்ந்த குழுக்களுக்கோ எந்த வித உரிமையுமில்லை என்பது.

இரண்டாவது, புலி தனது இராணுவத்தின் மூலம் பாஸிஸ வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அரசியலைக் கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் இன்றைய யுத்தத்தில் புலிக்கு ஒரு பாத்திரம் உண்டு. இத் தன்மையாலேயே புலி தொடர்ந்தும் தன்னைத் தக்க வைத்துக் கொள்ள முடிகிறது. புலியின் தலைமைக்கு தன் நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நோக்கமே உண்டு. இந் நோக்கத்தைச் சாதித்துக்கொள்வதற்கான அதிகாரத்தைத் தான் மட்டும் எடுத்துக் கொள்வதற்கான அரசியலைப் புலி கொண்டுள்ளது. இந்த அரசியல் நோக்கத்தைச் சாதிப்பதற்காக புலி கொண்டுள்ள நிலைப்பாடு தேசிய முதலாளித்துவத் தன்மையானதா? தரகு முதலாளியத் தன்மையானதா? என்பதை விவாதத்திற்கே விட்டுள்ளோம். (எங்களுக்கு குழப்பம்!). எங்களது கொள்ளளவும் ( Capacity ) அவ்வளவு தான்!!

இவ் விவாதங்களுக்காகவே தேசத்தின் குறிப்புகள், நூறு பூக்கள் பகுதிகள் தொடர்கின்றன. இவ் விவாதங்கள் தொடர்பாக வேறு சஞ்சிகைகளில் வரும் மாற்றுக் கருத்துகளையும் இரவல் தூண்டிலில் மறுபிரசுரம் செய்து வருகின்றோம். இவை நாங்கள் கற்றுக் கொள்வதற்காகவுமே.

*புலிகளின் பாஸிஸத்தை ஒருபுறம் அம்பலப்படுத்திக்கொண்டு, மறுபுறத்தில் புலி என்ன சக்தி என்று ஆராய்வது குண்டியில் தட்டி, தலையில் தடவிக் கொடுப்பதாகும். தேசத்தின் குறிப்புகள் புலிகளைப் பலப்படுத்தும் வேலையைத்தான் செய்கிறது. புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைக்கப் போகிறீர்களோ என்று கூடச் சந்தேகமாயிருக்கிறது.*

87 இல் புலிகள்-இந்திய இராணுவம் யுத்தம் நடந்தபோது, புலிகளின் பாஸிஸத்தை அம்பலப்படுத்துவதை மட்டுமே செய்தோம். இதன்போதும், பின்னரும் எங்கள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களில் முக்கியமானது, புலிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளின் சந்தர்ப்பவாதத்தை இனங் காட்டும் அதேநேரம் இந்திய இராணுவத்துடனான புலிகளின் "யுத்தத்தை"ஆதரிக்காதது தவறான நிலைப்பாடாகும் என்பது. இவ் விமர்சனத்தை நாம் ஏற்றுக் கொண்டோம். இதன் பின்னரே அம்பலப்படுத்தலை மட்டும் செய் யாது எல்லாவிதமான மதிப்பீடுக ளையும் செய்யவேண்டும் எனக் கருதினோம்.

அரசியல் ரீதியான மதிப்பீடு களை புறச்சூழலுடன் இணைத்துச் செய்வதன் அவசியம் கருதியே ஈழத்திலிருந்துவரும் "தேசத்தின் குறிப்புகள்" பிரசுரமாகி வருகிறது. மனித உரிமை மீறல்கள், பாஸிஸ, மக்கள் விரோத செயற்பாடுகளு க்கு எதிராக எங்கள் குரலை இங்கிருந்து எழுப்பி னோம். பிரஜைகளின் மதிப்பீடும், எங்கள் குரல்களும் ஒன்றுடனொ ன்று இணைந்தவையே. பிரஜை கள் பாஸிஸ, மனித உரிமை மீறல் களுக்கு எதிரான குரலுக்கு முக் கியத்துவம் கொடுப்பதில்லை என் றும், கடலோடிகள் அரசியல் ரீதி யான மதிப்பீடுகளுக்கு முக்கியத் துவம் தருவதில்லையென்றும் தனி த்தனியாகப் பிரித்துப் பார்ப்பது சரியான கணிப்பாகாது.

தேசத்தின் குறிப்புகள் முடிந்த முடிவுகளாக வலியுறுத்தப்பட வில்லை. திணிக்கப்படவுமில்லை. இவை குறித்த மாற்றுக் கருத்து களையும் தொடர்ந்து நாம் பிரசு ரித்து வருகிறோம்.



www.tamilarangam.net

ஒரு கருத்தை முன்வைக்கும் போதுதான் அது சரியானதா? பிழையானதா? அதைவிடவும் வேறு கருத்துகளும் உண்டா? என்பதையெல்லாம் அறிய முடிகிறது. தேசத்தின் குறிப்புகளுடன் விவாதம் பரவலாக்கப்பட்டுள்ளது என்றே நாம் கருதுகிறோம்.

புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைப்பதும், புலிகளுக்கு ஆதரவளிப்பதுமே எமது நோக்கமாயிருக்க முடியுமென்றால் அந் நோக்கத்திற்கு நாங்கள் பயன்படுத்தும் கருத்துச் சுதந்திரம் முற்று முழுதான எதிரன்றோ. புலிகளால் விடுதலையை வென்றெடுக்க முடியாதென்பதும், மானுட நேசிப்புள்ளவர்கள் புலிகளுடன் கூட்டுச் சேர முடியாதென்பதும் தொடர்ந்து தெளிவாகவே எம்மால் வலியுறுத்தப்படுகிறது. இதற்கு மாற்றான கருத்து தேசத்தின் குறிப்புகளிலும் வரவில்லை.

தங்களைத் துதிபாட மட்டுமே சுதந்திரம் என்று புலிகள் கூறுவதற்கும், புலிகளை எதிர்க்க மட்டுமே கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துங்கள் என்று புலி எதிர்ப்பாளர்கள் கூறுவதற்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் எம்மால் காணமுடியவில்லை. இந்த வகையான " வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தை " மறுதலித்து கருத்துச் சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தவே நாம் முனைகிறோம்.

*புலி பற்றிய இந்த ஆய்வுகள் தேவைதானா?*

இலங்கையரசை வெறுமனே பௌத்த சிங்கள இனவாத அரசு என்பதுடன் நாம் நிறுத்தி விடவில்லை. இதற்கும் அப்பால் போய் அரச அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் கட்சி தேசிய முதலாளித்துவமா? தரகு முதலாளித்துவமா? இதன் தன்மைகள் நாட்டை எப்படியான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்? இதன் தன்மைகள் யாரிடம் ஆதரவைப் பெறுகின்றன? இதற்கெதிராக யார் அணிதிரள்வார்கள்?... என்பவற்றை ஆய்வு செய்கிறோம். அரசியல் ரீதியான போராட்டத்தை வகுத்துக் கொள்வதற்கு இன்று நடைமுறையிலுள்ள அரசியல் சக்திகள் பற்றிய மதிப்பீடு அவசியம். இன்று புலிகள் - இலங்கையரசைக் கணக்கிலெடுக்காத போராட்டம் இருக்க முடியாது. இதனடிப்படையிலேயே புலி பற்றிய மதிப்பீடுகள் இடம் பெறுகின்றன.

*தேசிய விடுதலைப் போராட்டத்தையா, ஐக்கிய இலங்கையையா ஆதரிக்கிறீர்கள்?*

இன ஒடுக்குமுறைக்கு எதி

www.tamilarangam.net

ராக எந்த (தேசிய) இனமும் பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமை கோரிப் போராடுவது நியாயமானது என்பது எம் கருத்து. சனனாயகபூர்வமான இந்த உரிமை இனங்களுக்கிடையிலான உறவில் சனனாயகத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தும்.

இன்றைய சூழலில் போராட்டத்திற்கான வேலைத் திட்டம் தேசிய விடுதலைக்கானதா, ஐக்கிய இலங்கைக்கானதா என்பதில் மாற்றுக் கருத்துகளைக் கொண்டுள்ளோம். எனினும் மனித உரிமைகளைப் பேணுவதற்கும், ஜனனாயகத்தைக் கொண்டு வருவதற்குமான பொது உடன்பாட்டில் எமது இணைவு உள்ளது.

*புலி பாஸிஸம், மற்ற இயக்கங்கள் துரோகம், பாராளுமன்றக் கட்சிகள் பிழைப்புவாதம் என்றால் எது சரி? பிழைகளைச் சொல்லிக் கொண்டிருப்பது மட்டும் போதுமானதா?*

தவறுகளை இனங்கண்டு கொள்வதன் மூலம் அவற்றிலிருந்து திருந்திக் கொள்ள முடியும். அத்துடன் சமூக சக்திகளை இனங்காண்பதன் மூலமே நண்பர்களையும், எதிரிகளையும் வரையறுத்துக் கொள்ள முடியும்.

இனங்காட்டுதலுடன் நின்றுவிடாது, சரியான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய மாற்று (Alternative) அமைப்பை உருவாக்க வேண்டியது இன்றைய தேவையாகவுள்ளது. இத் தேவையை வலியுறுத்தியே "மூன்றாவது நிலை" பற்றி எழுதினோம். உருவற்றிருக்கும் இந் நிலைக்கு தெளிவைக் கொடுப்பதற்காக திறந்த விவாதங்களைப் பரவலாக்கி வருகிறோம். ஸ்தாபன உருவாக்கத்தை நோக்கிய கருத்துகள், விமர்சனங்களை மையப்படுத்துவதன் மூலமும், திறந்த-பகிரங்க விவாதங்கள் மூலமாகவும் காணப்படுகின்ற உடன்பாடுகளினூடாகவே மூன்றாவது நிலைக்கு வடிவம் கொடுக்க முடியும் எனக் கருதுகிறோம்.

## முன்னட்டை:

*உழைப்பை உறிஞ்சி*
*உருளும் உலகம்*
*உழைப்போர் இணைவால்*
*சமனாய்ச் செழிக்கும்.*

www.tamilarangam.net

# புலிகள் தேசிய சக்திகளா?

இன்று இலங்கையில் நடைபெறும் அழிவுகளாலும், அரசியல், ஆயுத நடவடிக்கைகளாலும் பாதிப்படைந்தவர்கள் அல்லது அவை பற்றி அக்கறை கொண்டவர்கள் புலிகளைப் பற்றி விமர்சிப்பது தவிர்க்கவியலாதது. ஆனால் குறிப்பிட்ட பகுதியினர் புலிகளின் புராணம் பாடுபவர்கள். இவர்கள் புலிகள் எவ்வகையான அநீதி இழைத்தாலும் அதனை மறைத்து வக்காலத்து வாங்குபவர்கள். இவர்களைப் பற்றி கருத்துக்கு எடுப்பதே தேவையற்ற செயல்.

இன்னும் ஓர் பகுதியினர் புலிகளின் ஜனனாயக மறுப்பு, அநீதி, மாற்றுக் கருத்துடையவர்களை அழித்தல் போன்றவற்றைக் கண்டித்து விமர்சித்தாலும் புலிகளிடம் ஏற்கக்கூடிய அம்சங்களும் உண்டு என்றும் வாதிடுவர். அதாவது புலிகளிடம் தேசியத்தன்மையுடன் கூடிய தேசிய முதலாளித்துவம் என்னும் வடிவம் உண்டென்று வாதிடுவர். இக் கூற்றில் உண்மை எதுவும் இருப்பதாக எமக்குப் புரியவில்லை.

உலகளாவிய அளவில் அரசியலும், அரசியல்வாதிகளும் இரு பெரும் முகாம்களாகப் பிரிந்துள்ளனர். அவை முதலாளித்துவக் கொள்கை கொண்டதாகவும், இடதுசாரித்துவ சோசலிசக் கொள்கை கொண்டதாகவும் இரண்டு

www.tamilarangam.net

வகைப்படுகின்றன. எம்மைப் பொறுத்தளவில் அதாவது மூன்றாம் மண்டல நாடுகளை எடுத்துக் கொண்டால் இந்த நாடுகளில் உள்ள அரசுகளையும், அரசியல் சக்திகளையும் மேலும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை தேசிய முதலாளித்துவம் எனவும், தரகு முதலாளித்துவம் எனவும் இரண்டு வகைப்படும். தேசிய முதலாளித்துவ சக்திகளாக எமக்குப் பரிச்சயமான அரசியல் கட்சிகளில் இந்தியாவில் காங்கிரஸ் கட்சி, இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றின் ஆரம்பக் கால இயல்புகளைக் குறிப்பிடலாம்.

மேலும் இரண்டு வகையான முதலாளித்துவ சக்திகளும் முதலீட்டாளர்களின் நலனுக்குச் சார்பாகவே இருப்பினும், ஆட்சிமுறை, தேசிய உற்பத்தி, சர்வதேச முதலீட்டு வர்த்தகத் தொடர்பு, கடன் பெறுதல் போன்றவற்றில் தமக்கிடையே பாரிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. ஆனால் இடதுசாரித்துவ சோசலிஸக் கொள்கை கொண்டவர்களால் கூட தேசிய முதலாளித்துவ சக்திகளிலுள்ள சில அம்சங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. அவையாவன:

1). பின்தங்கிய நாடுகளிடையே ஓர் ஒப்பந்தமுறையில் கூட்டமைப்பினை உருவாக்க ஊக்குவித்தலும் அதில் இணைந்து கொள்ளலும். உதாரணமாக அணிசேரா நாடுகளின் கட்டமைப்பு. இது வறிய நாடுகளின் பொருளாதார, கலாச்சார அம்சங்களை மேலும் பின்தள்ளாமல் பாதுகாக்க உதவக்கூடியது. புதிய உலகக் கொள்கையும், மூன்றாம் மண்டல நாடுகளிடையே தரகு முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பை உடைக்க உதவின.

2). ஏகாதிபத்தியங்கள், மேற்கு நாடுகள் போன்றவற்றின் முதலீடுகள் கட்டுப்பாடற்ற முறையில் உள்நாட்டில் அனுமதிக்க மாட்டாது. ஏனெனில் உள்நாட்டில் முதலிடம் உரிமை உள்நாட்டு முதலாளிகளுக்கே உண்டு எனும் கருத்தோட்டம் தேசிய முதலாளித்துவச் சக்திகளிடம் காணப்படும். இக் கருத்து உள்நாட்டு மூலவளங்கள், மனிதவலு, இயற்கைச் சுற்றாடலியல் போன்றவற்றை மேற்குலக நாடுகளுக்கு விலை பேசும் தரகு முறையை ஓரளவுக்கு மட்டுப்படுத்தும்.

3). தேசியக் கலாச்சாரங்களையும், பாரம்பரிய சமூக விழுமியங்களையும் கட்டிக் காப்பதில் ஓரளவு பங்குவகிக்கும்.

4). உள்நாட்டில் சிறு கைத்தொழில் நுட்பத்தினையும், அதன் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். விவ

www.tamilarangam.net




சாய உற்பத்திப் பொருட்களுக்கு ஊக்கமும், உள்நாட்டில் அவற்றிற்கான சந்தைப்படுத்தலில் உதவியும் வழங்கும். இதற்கு உதாரணமாக தெங்கு, பனம் பொருள் உற்பத்தி, தேசியப் பயிர்ச்செய்கை போன்றவற்றின் உற்பத்தி வளர்ச்சியானது சு.க காலத்தில் கணிசமானளவில் காணப்பட்டது.

5). சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றின் கடன் நிர்ப்பந்தங்கள், வர்த்தகக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் குறித்தளவில் கட்டுப்படுத்தும்.

6). ஒரு நாட்டில் தரகு முதலாளித்துவ சக்தியை எதிர்க்கும் உள்நாட்டு சக்தியாக தேசிய முதலாளித்துவ சக்தி காணப்படும்.

மேற்படி இயல்புகளைக் கொண்டிருப்பினும் தேசிய முதலாளித்துவ சக்தியானது காலப் போக்கில் தொடர்ச்சியான வளர்ச்சியில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு, கூட்டு வேலைத்திட்டம் போன்றவற்றினூடாக சொந்த நாட்டையும், சொந்த மக்களையும் அந்நிய முதலீட்டுக்கு அடகு வைக்கும் தரகுத் தன்மையைப் பெறுகிறது.

இந்த நிலைமைகள் எப்படி இருந்த போதிலும் மேற்படி தேசிய முதலாளித்துவத்தின் தன்மைகள் கூட எந்த வகையிலும் புலிகளுக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை. ஏனெனில் அணி சேரா நாடுகளின் கூட்டமைப்பை

www.tamilarangam.net

உடைப்பதற்கு எந்த மேற்குலக ஏகாதிபத்தியங்கள் காரணமானவையோ அவைகளிடம் இருந்து புலிகளுக்கு இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உதவிகளும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

பிரித்தானிய ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பின்னரும் தமிழர்களில் பலர் உத்தியோகத் தொடர்பு, வர்த்தகத் தொடர்பு போன்றவற்றால் இங்கிலாந்திலும், அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தொடர்ச்சியாகக் குடிபுகுந்தனர். பிற்காலங்களில் இவர்களில் பலர் பெரிய பணக்காரர்களாகவும், பலர் கணிசமானளவு சொத்துச் சேர்த்தவர்களாகவும் ஆனார்கள். இவர்களின் பண முதலீடுகளை கொழும்பு, கண்டி உட்பட தென் பகுதியில் முதலிட முடியவில்லை. இதற்கு முதலீட்டு உத்தரவாதமின்மையும், அரச அங்கீகாரமின்மையும் காரணமாகும். ஏனெனில் சிங்கள, தமிழ் மக்களிடையே இனத் துவேஷம் வளர்க்கப்பட்டு அடிக்கடி இனக்கலவரங்கள் நிகழ்ந்தன. மேற்படி பணக்காரர்கள் மேல்நாட்டவரின் வாழ்க்கையுடன் கணிசமானளவு ஒன்றியவர்கள். இவர்களின் சுதந்திரமான சுரண்டலுக்கும், உத்தரவாதமான முதலீட்டுக்கும் ஏற்ற வகையில் தமிழ்ப் பிரதேசத்தில் தங்களின் நலன் சார்ந்த நிர்வாகமும், அரசியல் சக்தியும் தேவைப்பட்டது. அந்நிய நாட்டவரின் முதலீட்டுக்கும், வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் முதலீட்டுக்கும் வழி சமைக்கும் வகையிலே தமிழீழத்தைப் புதிய சிங்கப்பூராக்கும் திட்டத்துடனேயே விடுதலைப் புலிகளும் செயற்படுகின்றனர். இவர்கள் தமிழீழத்தை ஏகாதிபத்தியங்களின் சந்தையாக்கத் தயாராக உள்ளனர்.

சொல்லளவில் சோசலிஸத் தமிழீழம் அமைக்கப் போவதாகக் கூறும் புலிகள் எமது இயற்கை வளங்களான கடல்வளம், இயற்கைக் கனிப்பொருள் வளம் மற்றும் சிறுகைத்தொழில், விவசாய உற்பத்திப் பொருட்கள் போன்றவை பற்றிய சரியான ஆய்வுகளோ, செயற்பாடுகளோ, திட்டமிடலோ இன்றியே உள்ளனர்.

மற்றும் புலிகள் மொஸாட், றோ போன்ற உளவுப்படைகள், உலகிலுள்ள அராஜக, பாஸிஸ சக்திகள் உட்பட பேய், பிசாசிடம் கூட உதவி பெறத் தயாராகவுள்ளனர். பெற்றுமிருக்கின்றனர். இதுவும் அவர்களின் தரகுத் தன்மையையே காட்டுகிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் முதலிட விரும்பும் வெளிநாட்டுத் தமிழர்கள் பலர் இன்றுவரை புலிகளின்

www.tamilarangam.net

ஆதரவுச் சக்திகளாகவே உள்ளனர். இவர்கள் தமிழ்ப் பிரதேசத்தில் முதலிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுமாயின் தேசிய முதலாளித்துவத் தன்மையினைப் பிரதிபலித்து புலிகளுடன் முரண்படக் கூடிய சாத்தியம் உண்டு. ஏனெனில் புலிகளிடம் உள்ள தன்மையானது இன்றுவரை தன்னைத் தேசிய முதலாளித்துவமாக அடையாளம் காட்டவில்லை. இவர்களின் ஒரே நோக்கம் தமிழ்த் தேசியத்தின் தனித் தலைமையைத் தாமே பெறவேண்டும் என்பதே. இதற்காக இவர்கள் தமிழ் மக்களை அர்த்தமற்ற வகையில் போராட்டத்திற்குள் தள்ளிவிடுகிறார்கள். இதற்காக இவர்கள் தமிழ் மக்களிடையே அவசியத்திற்கு அப்பாற்பட்டளவில் தமிழ்த் தேசிய உணர்வினைக் குறுந்தேசிய வெறியாக வளர்க்கின்றனர். இதனால் தமிழ் மொழி, கலை, கலாச்சாரத்தின் வளர்ச்சியைப் பின்தள்ளுகின்றனர். மொழி வளர்ச்சி, தமிழ் இலக்கியப் பரிணாமம் என்பவற்றைக் கருத்திலெடுக்காமல் மரபுத்தனமான மொழி வெறியையே வளர்க்கின்றனர். இவற்றால் தமிழ்க் கலாச்சாரத்தின் வளர்ச்சியானது பின்தள்ளப்படுகின்றது. மேற்படி தன்மைகளைத் தமிழ்த் தேசியப் புறநிலைவாதம் என்றும், தமிழ் மொழிப் புறநிலைவாதம் என்றும் கூறலாம்.


எனவே புலிகளின் இதுவரையான செயற்பாடுகளில் தேசிய முதலாளித்துவத்திற்குரிய அங்கீகரிக்கக் கூடிய செயற்பாடுகள்...

(தொடர்ச்சி 67ம் பக்கம்)



www.tamilarangam.net

# மீண்டும் பறை ஒலி



லொஸ் ஏஞ்சல்ஸ்
நகரம் எரிந்தது.
அமெரிக்காவின்
"தூய ஜனநாயகம்",
"புதிய உலக ஒழுங்குகள்"
என்ற பூச்சுகள்
எல்லாமே சாம்பலாக
தேவதையின் நகரம்
தீப்பற்றி எரிந்தது.

கறுப்பனெனும் ஏளனத்தோடு
றொட்னி கிங் மீது *
விழுந்த அடிகள்
பாண்டி நாட்டில்
சிவனின் கதை போல் **
எங்கள்
ஒவ்வொருவர் மீதும் விழுந்தது.

வளமான ஆபிரிக்காவிலிருந்து
வேரும் வேரடி மண்ணுமாக
பெயர்த்தெடுக்கப்பட்டோரின்
அடிமை உழைப்பில்
அமெரிக்கா வளர்ந்தது.
காலம் சென்றதில்
கூலிகளாகவும்,
ஏகாதிபத்தியத்தின்
பலிக்கடாக்களாகவும்,
தொழில் வாய்ப்புகள்
மறுக்கப்படுவோராகவும்
அவர்கள் வாழ்வு
சிதைந்து போனது.

துயரமும், எழுச்சியும்
நிறைந்த வாழ்வு
அவர்களது.

அன்றைய நாட்களில்
உடலையும்,
உளத்தையும்
சிலிர்த்திட வைக்கும்
விடுதலை வேட்கையை
தீயாய் வளர்க்கும்
ஆபிரிக்கத்து பறையின் ஒலியை
வெள்ளை எசமானர்கள்
தடுத்திட நினைத்தினர். ***
எனினும்
காலத்தை மீறி
மீண்டும் ஒலிப்பதை
இன்றும் கேட்கிறேன்.

www.tamilarangam.net

வருகின்ற நாட்களில்
கைகள் பல சேர்ந்து
தாளம் பிசகாமல்
எட்டுத் திக்கும்
இடிய முழங்கும்.

* கறுப்பன்

---

* 1991 மார்ச் மாதம் மதுபோதையில் கார் ஓட்டியபோது வெள்ளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட இவனின் வழக்கில் "பொலிஸார் செய்தது சரியே" என்ற தீர்ப்பு வழங்கப்பட்ட போதுதான் இம் மாதம் கறுப்பு-வெள்ளை இனத்தவர்களிடையே மோதல்கள் வெடித்தன. / ** இந்துமதக் "கதை"களில் ஒன்று!!./ *** அமெரிக்காவுக்கு அடிமையாகக் கொண்டுவரப்பட்ட காலத்தில் பறை அடிக்க வெள்ளை இன வெறியர்களால் தடைசெய்யப்பட்டது.

# பகிரங்கக் கடிதம்

எனது வீட்டு எலெக்றிக் வயர்கள்
நல்லாகவே உள்ளன.
நான் சிகெரெட் பிடிப்பதில்லை.
எனக்குத் தனிப்பட்ட எதிரிகள் இல்லை.
தற்கொலை செய்வதற்கான
பிரச்சினைகளும் இல்லை.

நான் என்றாவது
எரிந்து கிடந்தாலோ,
ரெயில் தண்டவாளத்தில்
துண்டாகிக் கிடந்தாலோ
நம்ப வேண்டாம்
பொலிஸ் அறிக்கைகளையும்,
பத்திரிகைச் செய்திகளையும்.

பாரதிதாசன் *

www.tamilarangam.net

....வெளிப்படவில்லை. ஆனால் ஒரு நாட்டில் உள்ள தரகு முதலாளித் துவ சக்தியை எதிர்க்கும் சக்திக ளில் ஒன்றாக தேசிய முதலாளித் துவ சக்தி கணிக்கப்படும். இவ் வெதிர்ப்புத் தன்மையானது பாரா ளுமன்றத்தின் போட்டி அளவிலோ அல்லது நிர்வாகப் பதவிப் போட் டி அடிப்படையிலோதான் நடை பெறும். இன்று இலங்கையிலுள்ள தரகு முதலாளித்துவ அரசு இயந் திரத்தை தொடர்ந்து எதிர்க்கி ன்ற சக்தியாக புலிகள் இருப்பது மட்டுமே புலிகளிடம் உள்ள நல்ல அம்சம். ஆனால் அந்த விடயத் தில் கூட புலிகளின் நோக்கமா னது அரசுடன் மோதி தனக்கென மிகப் பெரியளவு அதிகாரத்தைப் பெறும் சமரச நோக்கமே ஆகும்.

இருப்பினும் புலிகள் எனும் வெறும் சொல்லுக்குப் பின்னால் புலிகள் சார்ந்துள்ள போராளிகள், மக்கள் எல்லோரையும் சேர்த்துக் குறைத்து மதிப்பிடவில்லை. ஏனெனில் புலிகளின் தலைமைப் பீடத்திலும், மத்திய நிர்வாகத்தி லும் உள்ளவர்கள் மட்டுமே தேசி ய நலன் சம்பந்தமாக அக்கறை யற்று வெற்றுச் செயற்பாடுகளைக் கொண்டவர்கள். ஆனால் மிகுதிப் பகுதியினரிடம் தேசிய நலனில் உணர்வுபூர்வமாக அக்கறை கொண்டவர்களும் இல்லாமலி ல்லை. இதற்கு ஆரம்பத்தில் புலி களின் தலைமையை நம்பி தங் களை இணைத்துப் போராடி, பின் னர் புரிந்துகொண்டு விலகியவர் களும், தேசிய நலனில் அக்கறை யுடன் இப்பொழுதும் புலித் தலை மையை நம்பிப் போராடிக் கொண்டும், அதேவேளை இயக்க த்திலுள்ளோ சிறு குழப்பங்கள், நடவடிக்கைகளில் நீதி கேட்டு "காணாமற் போனவர்களும்" சான் றுகள். எனவே இப்படிப்பட்டோ ரின் தேசிய உணர்வுகள் இது வரையும் மறுக்கப்பட்டும், மறைக் கப்பட்டுமே வந்துள்ளன. இப்படிப் பட்ட நிகழ்வு புலிகளின் பல்லாண் டுகால தொடர்ச்சியான வரலாறா கிவிட்டது.

புலிகளிடம் தேசிய முதலாளி யத் தன்மையையும் மீறி தேசிய முதலாளியத் தன்மையுடன் ஒப்பு நோக்கக் கூடிய அம்சங்களாகத் தோற்றமளிப்பவை இரண்டு:

1). பிராந்திய ஆதிக்க நோக்கு டைய இந்தியப் படையையும், இந் தியாவையும் எதிர்த்தல்.

2). தேர்தல் கோஷமாக உருவா கிய தமிழீழக் கோஷத்தை ஆயு தப் போராட்டமாக தொடர்ந்து நடத்துதல்.

இந்தியாவுடன் நடந்த பேரத் தில் புலியும் பங்கு கொண்டது. மேலும் தான் எதிர்பார்த்த பெரி யளவிலான அதிகாரத்துடன் முக்

www.tamilarangam.net




கியத்துவம் கிடைக்கவில்லை என்பதே இந்திய எதிர்ப்புப் போராட்டம் தோன்ற உதவியது. அல்லாமல் இந்தியா என்று பிறிதோர் நாடு எங்கள் பிரதேசத்தில் தலையிட்டது என்பதற்கோ அல்லது எமது இறைமை பறிபோனது என்பதோ நோக்கமாக இருக்கவில்லை.

மற்றும் ஆயுதப் போராட்டமாக தமிழீழப் போராட்டம் புலிகளால் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதும் வேறு சில காரணங்களுக்காக! இலங்கையில் வர்க்க சிந்தனையின் வளர்ச்சியை மட்டுப்படுத்தவும், புதிய ஜனநாயகப் புரட்சியின் தேவையைத் தடுக்கவும் வெறித்தனமான போரையும், இனத் துவேஷத்தையும் வளர்க்க வேண்டும். இந்த நிலையானது சர்வதேச ஏகாதிபத்தியங்களின் நவகாலனித்துவ சுரண்டலுக்கான கால எல்லையைத் தொடர உதவும். எனவே சர்வதேசச் சுரண்டல் சக்திகள் புலிகளுக்கான ஆயுத விநியோகத்தினூடாகவும், அரசியல் ஆலோசனையினூடாகவும் புலிகளைப் பலப்படுத்தி அரசுடன் சமபலப்படுத்திப் போரைத் தொடரப்பண்ணுகின்றன.

மேலும் ஆயுதப் போராட்டத்தின் உருவாக்கத்திற்கு காரணம் புலிகள் மட்டுமல்ல, பல்வேறு இயக்கங்கள், இளைஞர்கள், மக்கள்தான் காரணம். பின்னர் புலிகள் போராட்டத்தைத் தன்னாதிக்கமாக்கியது. புலிகள் இல்லாது போனால்கூட ஆயுதப் போராட்

www.tamilarangam.net

டம் நிற்கப் போவதில்லை. ஏனெனில் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் எதிர்ப்பின் ஓர் போராட்டப் பரிணாமமே ஆயுதப் போராட்டமாகும். இப் பரிணாமத்தையே புலிகள் வேறு விதமாக்கி ஆண்ட பரம்பரைக்காகவும், தேசிய, மொழிப் புறநிலைவாதத்திற்காகவும் சிங்கள, முஸ்லீம் மக்கள் மேல் அராஜகத்தை மேற்கொள்ளவும் தமிழ் மக்களை மேலும் அடக்குமுறைக்குள்ளாக்கவும் தமது தேவைக்கு ஏற்றவாறு கேவலமாக்கினர்.

மறுபக்கத்தில் இலங்கை இனவெறி அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுவரும் தமிழ் மக்களில் பலர் புலிகளை விரும்பாவிட்டால்கூட புலிகளுடன் தங்களை இணைத்துக் கொள்வது தவிர்க்கவியலாததாக எண்ணி இணைத்துக் கொள்கின்றனர். இதன் காரணம் இந்த யுத்தத்தில் நடுநிலைமை என்ற நிலைப்பாடு இல்லை என்பதும், தற்காப்பு நோக்கமும் ஆகும்.

இவ் வகையாகப் புலிகளுக்குள்ளே உள்ள பிரதான வித்தியாசமானது இந்த முரண்பாடுடைய இரு பகுதிகளாகும். ஒரு பகுதி வெற்றுச் செயற்பாடுகளைக் கொண்ட அதேநேரம் தமிழ்த் தேசியத்தின் தனித் தலைமையைத் தானே பெறவேண்டும் என்ற வெறித்தனமான ஆர்வங்கொண்ட தலைமையும், அதன் அதிகார எடுபிடிகளும். மறுபகுதியில் தலைமையுடன் முரண்படவிருக்கின்ற தேசிய முதலாளித்துவ சக்திகளும், உண்மையான தேசிய உணர்வு கொண்ட போராளிகளும், மக்களும் ஆகும்.

இனிவரும் காலத்தில் மேற்படி இரண்டாவது பகுதியினரால் மேற்கொள்ளப்படவிருக்கும் முன்னேற்றகரமான நடவடிக்கையே சிறு மாற்றத்தையேனும் போராட்டத்திற்கும், மக்களுக்கும் வழங்கும். இரண்டாவது பகுதியினரின் சாதுரியமான நடவடிக்கையானது சரியான சந்தர்ப்ப சூழ்நிலைமைகளில் தகுந்த முறையில் தலைமையின் சந்தர்ப்பவாதப் போக்கு, தேசியத்தின் மீது அக்கறையற்ற வெற்றுச் செயற்பாடுகள், தான்தோன்றித்தனமான நரமாமிச வேட்டைகள், இனவிடுதலையைப் பேரம் பேசும் தன்மை போன்றவற்றைப் பரந்துபட்ட வடிவில் அம்பலப்படுத்தி போராட்ட வடிவத்தை மாற்றுவதன் மூலமே பயனேதும் பெறமுடியும்.

– சலீம்

www.tamilarangam.net

# சரிநிகருடன் ஓர் நேர்காணல்

பத்திரிகை விடயங்கள் தொடர்பாக அண்மையில் இங்கு வந்திருந்த "சரிநிகர்" ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நண்பருடன் உரையாடியவை களின் சிறு தொகுப்பு. சரிநிகரின் அறிமுகப்படுத்தலாகவும் இதைக் கொள்ளலாம்.

– கடலோடிகள்

?: *சரிநிகர் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடப்படுகிறது. சரிநிகரினதும் மேர்ஜ் ஜினதும் கருத்து ஒன்று தானா? மேர்ஜ்ஜினால் சரிநிகர் கட்டுப்படுத்தப்படாதா?*

!: சரிநிகர் 'மேர்ஜ்ஜின்' உத்தியோகபூர்வ பத்திரிகை அல்ல. இதுபற்றி நாம் தெளிவாகவே கூறிவருகிறோம். மேர்ஜ்ஜின் கருத்தும், சரிநிகரின் கருத்தும் முரணானவை அல்ல. ஆனால் மேர்ஜ்ஜின் கருத்துகளுடன் மட்டும் சரிநிகர் தன்னை எல்லைப்படுத்திக் கொள்வதில்லை. சரிநிகர் ஒரு பத்திரிகை. மேர்ஜ் ஒரு நிறுவனம்!

?: *எவ்வகையான கருத்துகளும் பிரசுரிக்கப்படும் என சரிநிகர் குறிப் பிடுகிறது. "எவ்வகையானதும்" என்பதன் அர்த்தம் என்ன? வீரகேசரி, தினகரனிலிருந்து இவ் விடயத்தில் சரிநிகர் எவ்வாறு வேறுபடுகிறது?*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

!: "எவ்வகையான" என்பது ஆதிக்கம் செலுத்தும் "ஆதிக்க சக்திகளை" நியாயப்படுத்துகிற கருத்துகளைக் கேள்விக்குட்படுத்தும் "எவ்வகையான" கருத்துகளையும் என்று புரிந்து கொள்ளப்படுவது அவசியம். சரியானதும், தவறானதும், தமக்கேயுரிய தர்க்க நியாயப்படி வெளிவரும்போது தமக்குரிய பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு. வாசகர்களை முட்டாள்களாகக் கருதி, தம்மை அதிமேதாவிகளாகப் பாவித்து, "பிழைப்பு நடாத்துகிற" பத்திரிகைகளான நீங்கள் மேற்சொன்ன பத்திரிகைகளுக்கு உண்மையோ, உண்மை பற்றிய தேடலோ, பொறுப்புணர்வோ முக்கியமில்லை. நாம் இவை முக்கியம் எனக் கருதுகிறோம்.

?: *ஓர் பத்திரிகை சாதிக்கக் கூடியது என்ன? சரிநிகரின் எல்லை என்ன?*

! : அதன் அளவையும், தரத்தையும் பொறுத்தது இது. சரிநிகரின் எல்லை வானம் வரை உயர்ந்தது என நினைக்கின்றோம். அதை எல்லைப்படுத்துவது எமது அறிவுதான். இதை வளப்படுத்துவது எல்லோரதும் கடமைகள். "தோழமை" ஆசிரியர்களின் வார்த்தைகளை இரவல் வாங்கிப் பேசுவதானால் "வாசகர்கள் அனைவரும் பெயர்கள் சொல்லப்படாத ஆசிரியர்களே!". எனவே எல்லைக்கான பொறுப்பு அனைவரதுமே!

?: *வடக்கு, கிழக்கில் வெளிவரமுடியாத சரிநிகர் கொழும்பிலிருந்து வெளிவருவதானது புலிகளைவிட இலங்கையரசு பறவாயில்லை என்பதாக இல்லையா?*

! : இரண்டிடமும் ஜனநாயகம் என்பது பற்றியுள்ள அபிப்பிராயம் ஒன்றுதான். பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய அறிவும் ஒன்றுதான். இரண்டும் உட்கார்ந்திருக்கும் தளங்கள் வேறுபடுவதால், அவற்றின் அணுகுமுறைகளும் வேறுபடுகின்றன. "ஜனநாயகம்" பற்றிய நிலைப்பாட்டில் ஒன்றைவிட மற்றொன்றை உயர்வானதாகக் கருதிவிட முடியாது. சரிநிகர் கொழும்பிலிருந்து வெளிவருவது இலங்கையரசின் ஜனநாயகச் சிறப்பாலல்ல, ஜனநாயக சக்திகளின் உலகளாவிய ஆதரவுப் பலத்தாலேயே.

?: *கொழும்பிலிருந்து சரிநிகர் வெளிவருவதால் புலிகளிடமிருந்து இப்போது தப்பியுள்ளீர்கள்! ஆனாலும் கொழும்பிலிருந்து இயங்கும் EPDP, PLOT, TELO, EPRLF, ENDLF குழுக்களால் சரிநிகருக்கு எந்தத் தொல்லைகளும் இல்லையா?*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

!: பத்திரிகையும், பத்திரிகையாளர்களும் தொல்லைகளிலிருந்து எப்படி விடுபட முடியும்? தொல்லைகளை எதிர்நோக்காத பத்திரிகை இன்றைய நிலையில் உண்மையான பத்திரிகையாக இருக்கமுடியுமா? ஆயினும் நீங்கள் குறிப்பிட்ட குழுக்களால் "குறிப்பிடத்தக்களவு" தொல்லைகள் எதையும் நாம் இதுவரை எதிர்நோக்கவேண்டி ஏற்படவில்லை.

*?: தமிழ் மக்களிடையே சிங்கள மக்களைப் பற்றியும், சிங்கள மக்களிடையே தமிழ் மக்களைப் பற்றியும் உண்மைச் செய்திகளைக் கொண்டு செல்வதில் தமிழ் இயக்கங்களோ, சிங்களக் கட்சிகளோ அக்கறை காட்டவில்லை. அது அவர்களுக்குத் தேவையும் இல்லை. சரிநிகரின் பங்கு இதில் என்ன?*

!: சரிநிகரின் பங்கு எதில்? அக்கறை காட்டாமையிலா? (சிரிப்பு). மொழிபெயர்ப்புப் பிரச்சினை பெரிய பிரச்சினையாகவுள்ளது. முடியுமானளவு `யுக்திய`வில் (மேர்ஜ் இன் சிங்களப் பத்திரிகை) மொழிபெயர்த்துப் போடுகிறோம். போதாமை உணரப்படுகிறது. இதில் நாம் அக்கறையாகவே இருக்கிறோம். வேறு பத்திரிகைகள் இல்லையென்பதும் ஒரு பிரச்சினைதான்.




Foto: dpa

www.tamilarangam.net

?: *இந்தியாவிலிருந்து வெளிவரும் புரட்சிகர, ஜனனாயக சக்திகளின் பத்திரிகைகளுடனும், இலங்கை, இந்தியாவுக்கு வெளியே சிதறியுள்ள ஈழத் தமிழர்களின் பத்திரிகைகளுடனும் சரிநிகர் எப்படியான உறவு வைத்திருக்கிறது?*

!: உறவு உண்டு. குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவுக்கு பிரமாதமாக இல்லை. மேலும் வலுவாக இதை உருவாக்க விருப்பம். அதற்கு முயல்கிறோம். மறுபக்கத்திலிருந்தும் இதற்கான அக்கறையுடன் கூடிய தொடர்புகொள்ளல்களை எதிர்பார்க்கிறோம்.

?: *வெளிநாடுகளிலிருந்து ஈழத் தமிழர்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகள், பத்திரிகைகளில் அநேகமானவை இலங்கையில் இல்லாத கருத்துச் சுதந்திரம் வெளிநாடுகளில் இருப்பதாகவும், இதை முழுமையாகப் பயன் படுத்த வேண்டும் என்றும் கூறி வருகின்றன. (நாங்களும் தான்!!). உங்களுக்குக் கிடைக்கும் இச் சஞ்சிகைகள், பத்திரிகைகளைப் படிக்கும் போது இக் கூற்று நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கருதுகிறீர்களா?*

!: வெளிநாடுகளில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளிடையே சுதந்திரத்தைப் பயன்படுத்துவதிலுள்ள அக்கறை தெரிகிறது. ஆயினும் எமது தேவையையொட்டி அவை சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்லமுடியாது - ஓரிரு பத்திரிகைகள் நீங்கலாக. சுதந்திரமான மாற்றுக் கருத்தை வெளியிடும் உரிமைக்காக விட்டுக்கொடுக்காது போராடுவதும், அதை நடைமுறைப்படுத்துவதில் அக்கறையுடன் செயற்படுவதும், இதற்காக ஒரு ஐக்கியப்பட்ட நடைமுறையைக் கைக்கொள்வதும் ஐரோப்பா உள்ளிட்ட அனைத்துப் புகலிடங்களிலிருந்தும் வெளிவரும் பத்திரிகைகளின் கூட்டு முயற்சியால் ஒரு சக்திவாய்ந்த மாற்றுச் செய்தி மற்றும் கருத்து வெளியீட்டு ஒழுங்கை உருவாக்குவதும் இன்றைய தேவைகளாக உள்ளன. இதை இப் பத்திரிகைகள், எழுத்தாளர்கள் தீவிர கவனமெடுத்து செயற்படுத்துதல் வேண்டும் என நினைக்கின்றோம்.

---

யூன் மாத

## இரவல் தூண்டில்

"எட்டடிக் குச்சுக்குள்ளே - பத்து உசுருக எப்படி வாழுமுங்க?"

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# அங்கே... இ ங் கே எங்கே...

அறை - 1:

இரண்டு உயரப் படுக்கைகளைக் கொண்ட கட்டில். ஒரு கதிரை. உடுப்புகள் வைக்கும் அலுமாரி கட்டிலை மறைத்து இருக்கிறது. அலுமாரிக்கும், குசினிக் கதவிற்கும் இடையில் கடும் நீலத்தில் திரைச்சிலை.

ரெலிபோன் வைக்கும் சிறிய ஸ்ருல். ரேடியோ. ரெலிவிசனுக்கு மேல் கடிதம் எழுதும் கொப்பி. சமறிக் கொப்பி.

லூர்துமாதாவின் தண்ணீர்ப் போத்தல்.

ஒரு பக்கச் சுவரின் மூலை மேல் புறத்தில் லக்சுமி படம் கலண்டர் வடிவில். சற்றுத் தள்ளி Air France படம் அழகான தலைமயிருள்ள பெண் கூந்தலை விரித்தபடி.

மற்றப் பக்கச் சுவரில் விஜய காந்த், மளிகைக்கடை கலண்டர். எடுப்பான தோற்றத்துடன் மெல் லிய சிரிப்புடன் இயக்கத் தலை வரின் படம், கலண்டர், மணிக் கூடு 5 நிமிடம் முந்தி விடப்பட் டுள்ளது.

சுரேஸ் உன்னை இந்த
நம்பருக்கு T.P
எடுக்கட்டாம்.
47 08 10 10

என எழுதி பேப்பர் துண்டு ஒட்டப்பட்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சுரேஸ்தான் .... சொல்லுங்கோ"

"............................"

"என்ன நடந்தது? வடிவாய்ச் சொல்லுங்கோ"

"............................"

"இரண்டு கிழமையாமோ?"

"............................"

"எப்ப அடிச்சனீங்கள்?"

"............................"

"ஆ.....!"

"............................"

"ருமிலைதான் நிப்பன். வாங்கோ. சரி. ஆ.."

டொக். டொக். டொக்.

"வாங்கோ..!"

"அண்ணையாக்களுக்கு அடிச்சுச் சொன்னனீங்களோ?"

"இல்லை. இஞ்சையிருந்து எடுக் கேலாது. ரெலிக்காட் வாங்கித் தான் அடிக்க வேணும்"

*லக்சுமி. விஜயகாந்த். இயக்கத் தலைவர் படங்கள் திரும்பு கின்றன.*

*　　　*　　　*

அறை – 2

*ஒரு மூலைப் பக்கச் சுவரில் சிலந்தி வலைப் பின்னல். தும்புக் கட்டைகள் முறிந்து சிதம்பிப் போயுள்ளன. சுவர்ப் பக்கமொன் றில் இரத்தத் திட்டுக்கள். தலை மயிர்க் கற்றைகள் ஆங்காங்கே யுள்ளன. சங்கிலித் துண்டுகள் சில வெட்டிப் போடப்பட்டுள்ளன. எட்டுக்கால் பூச்சிகள் சிலது ஓடித் திரிகின்றன. மேசையின் மேல் கொப்பி. துப்பாக்கி.*

"உனக்கென்ன பேற்ரா?"

"சிவானந்தன்"

"இயக்கத்திலை என்ன பேற்பா உனக்கு?"

"நான் ஒண்டிலையும்...."

"----- சொல்றா இயக்கத்திலை என்ன பேரெண்டு"

"ஐயோ...."

"ஈ.பி.யிலை எத்தினை பெட்டை யளுக்கடா ------ ?"

"ஐயோ.... நான் ஒண்டிலையும்..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உண்மையைச் சொல்லாட்டி தெரியுந்தானே. சுவரைப் பார். சொல்லு. உன்ரை காம்பிலை எத்தினை பெட்டையள் இருந்தவளவை. சொல்றா"

"ஐயா! நான் ஒண்டிலையும்.... ஐயோ..."

"உண்மையைச் சொல்லு. சொல்லாட்டி சத்தியமா இனி வைப்பன். சொல்றா. கொம்மாவிட்டை இந்தியனாமி எத்தினை தரம் வந்து போனவன்?"

"..........................."

✳ ✳ ✳

அறை - 3

*சோபா, மற்றும் கதிரைகள் அடுக்கியுள்ளன. கீழே சீனப் பாய் போடப்பட்டுள்ளது.*

*சுவர் - மரணமடைந்த ஓர் இளைஞனின் படம். அருகில் மரணமடைந்த வயோதிபத் தம்பதிகள் இருவரின் படம். முன்றிற்கும் கீழும் நிரந்தரமாக மின்சார விளக்கு எரிந்துகொண்டுள்ளது.*

*மேசை, கதிரை, கல்குலேற்றர்.*

"சரியா நாலு மணியாகுது. கதவைத் திறந்து ஆரும் வருகினமோ பார் தம்பி!"

"இல்லை அக்கா"

"சரி கூறப்போறன். நாலாவது சீட்டு, முப்பதாயிரம் தொகை. முதல்லையே பத்தாயிரத்திலை இருந்து துவங்கப் போறன். Rer Bயிலை ஆரோ விழுந்து செத்துப் போச்சுதுகளாம். அரை மணித்தியாலமா ரெயினில்லையாம். சோதி பத்தாயிரம் மட்டும் கேக்கச் சொல்லி ரெலிபோன் அடிச்சவன்"

"போனமுறை எவ்வளவு கழிவக்கா போனது?"

"பதின்மூவாயிரத்து தொளாயிரம்"

"நான் பத்தாயிரத்து 200"

"பதினொராயிரம்"

"பதினொராயிரத்து 500"

"12 ஆயிரம்"

"12 ஆயிரத்து 100"

"12 ஆயிரத்து 200"

"12 ஆயிரத்து 300"

"12 ஆயிரத்து 500"

"........................"

"........................"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வேலை ஒருதரும் கேக்கையில் லையோ? முறை கூறப்போறன். 14 ஆயிரத்து தொளாயிரத்து 50 முதலாம் முறை. 14 ஆயிரத்து தொளாயிரத்து 50 இரண்டாம் முறை. 14 ஆயிரத்து தொளாயி ரத்து 50 மூண்டாம் முறை"

"15 ஆயிரம்"

* * *



"ஏன்ரா அவசரப்பட்டு எடுத்தனீ? நீ எடுக்கிறதெண்டா நான் வந்தி ருக்க மாட்டன்"

"........................."

"எப்ப வந்தவ?"

"........................."

"எங்கடை அம்மாவும் கொழும் புக்கு வரப்போறன் எண்டுதான் எழுதியிருக்கிறா. என்ரை நிலை மை உனக்குத் தெரியுந்தானே. இருந்தா உனக்கில்லாத காசே. வேலைக்குப் போக வேணும். வரட்டே."

– சுகன்

www.tamilarangam.net

# சுயநிர்ணய உரிமை

முஸ்லீம் மக்கள் மீது புலிகள் மீண்டும் தமது கோரப் பற்களைப் பதித்துள்ளன. அழிஞ்சிப்பத்தன கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த முஸ்லீம் மக்கள் 54 பேர் - ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் - கத்தி, வாள் மற்றும் கூரான ஆயுதங்களால் கொத்திக் குதறப்பட்டுள்ளனர். பச்சிளம் குழந்தைகளைக் கூட உயிருடன் விட்டு வைக்கவில்லை. புலிகள் அல்லவா. தலையை வெட்டி எடுத்துக் கொண்டு போய்க் காட்டுக்குள் எறிந்துள்ளன.

இதற்குப் பதிலடியாக இக் கிராமத்தை அண்மிய கரபொல, முதுகல கிராமத்தைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் 53 பேர் முஸ்லீம் வெறியர்களினால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களிடமிருந்தும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மட்டுமல்ல, பாலகர்களும் தப்பவில்லை.

இரண்டு பக்கத்து வெறியர்களாலும் மொத்தம் 50 கைக் குழந்தைகள் கண்டதுண்டமாக்கப்பட்டுள்ளார்கள்.

ஏறாவூர், காத்தான்குடிப் பள்ளிவாசல்களுக்குள் வைத்து முஸ்லீம் மக்களைச் சுட்டுக் கொன்றமை, வடக்கிலிருந்து உடமைகளைக் வழிப்பறி செய்து முஸ்லீம் மக்களை விரட்டியமை, சென்ற மாதத்திய இக் கொலைகள் என்பன காட்டுவது என்னவென்றால், தமிழர்கள் என்று தன்னிச்சையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட முஸ்லீம்களை தனி இனமாகத்தான் புலிகள் கருதுகின்றன என்பதையே!

தமிழர்களின் பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காது, அதே நேரம் தமிழர்களை தனி இனமாகவே நடாத்தி அவர்களின் கலாச்சாரங்களை, இன அடையாளங்களை, பொருளாதாரத்தை அழிப்பதன் மூலமும், பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விரட்டுவதன் மூலமும், அப்பாவி மக்களையும், போராளிகளையும் கொன்றும், சிறையிலடைத்தும், துன்புறுத்தியும் கோரத் தாண்டவம் ஆடுவதன் மூலமும் இலங்கை அரசு தனது

www.tamilarangam.net

பௌத்த-சிங்கள இனவெறியைக் காட்டுகிறது என்றால், புலியும் அவற்றையேதான் செய்து தமிழ் இனவெறியைக் காட்டுகிறது.

தமிழர்களுடன் தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்ந்து, இலங்கை-இந்தியா இராணுவங்களிடமிருந்து தமிழ் மக்களையும், போராளிகளையும் காப்பாற்றி, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஆதரவு தந்து முஸ்லீம் மக்கள் தமிழர்களுடன் கொண்டிருந்த சகோதர உறவைத் தமிழ் இனவாதம் துண்டித்து, சிறுபான்மை இனங்களை எதிரிமைப்படுத்தி பகையாளிகளாக்கியுள்ளது. இதன் பெரும் பங்கு புலிகளையே சாரும்.

முஸ்லீம் மக்களுடனான சகோதரத்துவத்தை விரும்புகின்ற தமிழர்கள் இன்றைய நிலையில் செய்ய வேண்டியது முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும், பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிப்பதுடன், அவர்களின் பாதுகாப்புக்கும், ஜனநாயக உரிமைகளுக்குமாகப் போராடுவதாகும். இதுவே இனவெறியர்களால் சாகடிக்கப்பட்ட நம்பிக்கையையும், சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்பும்.




# தூண்டில்

மே-யூன் 1992

கலம் : 51

ஆசிரியர்குழு: கடலோடிகள்



✉ : THOONDIL
Südasien Büro
Grosse Helm Str. 58
4600 Dortmund 1
Germany

☎ : (0231) 13 66 33
*(திங்+வெள்ளி: 17.00-21.00 மணி*
*புதன்: 15.00-18.00 மணி)*


சந்தா

ஜேர்மனி: 6 மாதங்கள் = 20,-டி.எம்.
1 வருடம் = 38,-டி.எம்.
ஐரோப்பா: 6 மாதங்கள் = 25,-டி.எம்.
1 வருடம் = 48,-டி.எம்.
அமெரிக்கா,
ஆபிரிக்கா,
ஆசியா: 1 வருடம் = 65,-டி.எம்.
ஒஸ்ரலியா: 1 வருடம் = 75,-டி.எம்.

தபாற்கணக்கு இல. 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

*சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தாவை அனுப்பியதும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்